
முருகா

# திருப்புகழமிர்தம்

சர்வதாரி [illegible] பங்குனி

2 MAR 194
MADRAS



[illegible]

[illegible]

[அணு 3

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

## ஒரு சிறந்த மாத வெளியீடு.

"குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்"

(மலர் 13.)

சர்வதாரி ௵ சித்திரை ௴ முதல் பங்குனி ௴ வரையில்
(*1948* ௵ ஏப்ரல் ௴ முதல் *1949* ௵ மார்ச்சு ௴ வரையில்)


திருப்புகழ்த் தொண்டன்

**கிருபானந்தவாரி**



"**திருப்புகழமிர்தம்**" காரியாலயம்,

சிந்தாதிரிப்பேட்டை,

சென்னை 2.

உ

முருகா

# திருப்புகழமிர்தம்

## பொருளடக்கம்

விஷயங்கள் | பக்கங்கள்

### திருப்புகழ்

(பதவுரை, பொழிப்புரை, விரிவுரை, கருத்துரையுடன்)


| | | |
|---|---|---|
| நெடுங்களம் | பஞ்சபுலனும் | ௧ |
| திருக்கூடலையாற்றூர் | வாட்டியெனை | ௩௩ |
| இராமேசுரம் | வாலவயதாகி | ௯௫ |
| எழுகரைநாடு | விரகறநோக்கி | ௯௭ |
| விரிஞ்சிபுரம் | மருவுமஞ்சு | ௧௨௯ |
| மதுரை | அலகிலவுணரை | ௧௯௧ |
| ,, | பரவு நெடுங்கதிர் | ௧௯௩ |
| ,, | பழிப்பர் | ௨௨௧ |
| ,, | முத்து நவ | ௨௫௩ |
| ,, | நீதத்துவமாகி | ௨௫௯ |
| திருச்செந்தூர் | தண்டையணி | ௨௮௫ |
| ,, | உததியறல்மொண்டு | ௩௧௩ |
| ,, | நாலுமைந்து | ௩௪௫ |


### வரலாறுகள்


| | |
|---|---|
| வைகையாற்றில் மணல்தாங்கு மழுவாளி | ௩௮ |
| நான்முகனைக் குட்டியது | ௭௧ |
| திருமுருகவேள் திருப்பெரு வடிவம் | ௨௯௰ |
| காலனையுதைத்தது ... | ௩௫௰ |
| காமனைக் காய்ந்தது ... | ௩௫௨ |


### கந்தரலங்காரம்


| | |
|---|---|
| ஆவிக்கு மோசம் வருமாறறிந்து | ௯ |
| கொள்ளித்தலையில் | ௪௩ |
| சூலம் பிடித்து | ௭௪ |


### பெரியபுராணம்


| | |
|---|---|
| விறன்மிண்ட நாயனார் புராணம் | ௧௧ |
| அமர்நீதி நாயனார் புராணம் | ௪௭ |
| எறிபத்த நாயனார் புராண[illegible] | ௭௯ |
| ஷை விளக்கம் | ௭௫ |
| [illegible] நாயனார் புராணம் | [illegible] |

| | |
|---|---|
| கண்ணப்ப நாயனுர் புராணம் | ௱௩௯, ௱௯௯. ௱௯௯, ௨௩௧ |
| குங்குலியக்கலய நாயனுர் புராணம் | ௨௯௨ |
| மானக்கஞ்சாற நாயனுர் புராணம் | ௨௯௪ |
| அரிவாட்டாய நாயனுர் புராணம் | ௩௨௧ |
| ஆனய நாயனுர் புராணம் ... | ... ௩௫௩ |


## கற்பு


| | |
|---|---|
| பொற்கொடி ... | ௧௫ |
| தையல்நாயகி ... | ௫௭, ௮௩ |
| தணிகைநாயகி ... | ௱௧௭, ௱௪௪ |
| தாமரைக்கண்ணி ... | ௱௭௯ |
| மாதினியாள் ... | ௨௱௯ |
| குணவதி ... | ௨௩௯ |
| கமலவேலி ... | ௨௭௨ |
| அபிராமி ... | ௩௰௨, ௩௩௰, ௩௯௰ |


## பிற கட்டுரைகள்


| | |
|---|---|
| உலகம் எதனுல் உளது | ௱௨௪ |
| இறையும் இறையும் | ௱௫௫ |
| உண்மையின் உயர்வு | ௱௮௫ |
| பொய் சொல்லாதே | ௨௰௯ |
| மூன்று வினக்கள் | ௨௯௯ |
| உலகம் பலவிதம் | ௨௭௯ |
| பசி | ௩௭௰ |

| | | |
|---|---|---|
| மால்வரை யுடைத்தவன் | (கி. வா. ஜ.) | ௨௧ |
| பூசாரிப் பாட்டு | ,, | ௯௰ |
| உண்மையா பொய்யா? | ,, | ௱௨௯ |
| திருவவதாரக்கதை | ,, | ௱௫௭, ௱௮௮ |
| புகழ்வரம்பிகந்தோன் | ,, | ௩௩௮ |
| பிரார்த்தனை | ,, ... | ௩௭௰ |

| | |
|---|---|
| திருப்புகழமிர்தச் சிறப்பு | ௯௪ |
| திருப்புகழமிர்தம் வாழ்த்து | ௩0 |
| வாழியர் அமுதே | ௩௧ |
| திருப்புகழும் சிவனும் (திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை) | ௨௪ |
| திருப்புகழும் பார்வதியும் ,, | ௯௫, ௱௨௮ |
| திருப்புகழும் திருமாலும் ,, | ௨௪௭, ௨௮௧ |
| பாரதியாரும் பரம குமரனும் (மு. பெருமாள்) | ௨௪௯ |

# "திருப்புகழமிர்தம்" சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| ஆண்டு 1-க்கு தபாற் கூலி யுள்பட | இந்தியா, சிலோன் | ... ரூ. 2-0-0 |
| | பர்மா, மலேயா முதலிய வெளி நாடுகளுக்கு | ... ரூ. 2-8-0 |
| | தனிப்பிரதி (உள் நாடு) | ... ரூ. 0-3-0 |

1. சந்தாதாரராகச் சேர விருப்பமுள்ளவர்கள் ஆண்டுக் கட்டணத்தை முன்னதாகவே செலுத்தவேண்டும். மணியார்டர் மூலம் சந்தாவைச் செலுத்துபவர்கள் மணியார்டர் கூப்பனில் விலாசத்தை விவரமாக எழுதியனுப்பவேண்டும்.

2. நமது பத்திரிகை ஒவ்வொரு சித்திரையினின்றே தொடங்கும். ஆதலால் நேயர்கள் எந்தத் திங்களில் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவ்வாண்டு சித்திரையினின்றே இதழ்கள் அனுப்பப்படும். ஒருஆண்டுக்கு குறைந்த சந்தாகிடையாது.

3. நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் மாதம் 16-ந்தேதி தபாலில் சேர்க்கப்படும்.

4. இதழ் கிடைக்கப்பெருத சந்தா நேயர்கள், அத்தமிழ் மாதம் 15உக்குள் எழுதிப் பெறவேண்டும். அதற்குமேல் எழுதுவோர் 0-3-0 தபால் ஸ்டாம்பு அனுப்பினால்தான் வேறு பிரதி அனுப்பப்படும். இதழ் கிடைக்கப் பெருதவர்கள் தமது ஊர் தபாலதிகாரிகளுக்குந் தெரிவிக்கவேண்டும். காரியாலயத்தில் பலமுறை சரி பார்த்து இதழ்கள் தபாலில் சேர்க்கப்படுவதால் காரியாலயத்தில் தவறுநேர இடமில்லை.

5. விலாசமாறுவோர், தமது மாறுதல் விலாசத்தை உரிய காலத்திற்குள் நமது காரியாலயத்திற்கும் போஸ்டாபீசுக்கும் தெரிவிக்க வேண்டும். இன்றேல் பழைய விலாசத்திற்கே அடுத்த இதழ் அனுப்பப்படும். அதற்கு யாம் பொறுப்பாளியல்ல.

6. பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டில் எழுதவேண்டும். அல்லது ஸ்டாம்பு அனுப்பிவைக்க வேண்டும். அவ்விதம் செய்தால்தான் பதில் கிடைக்கும்.

உ

ஓம் குஹாய நம:

# திருப்புகழமிர்தம்

குருப்புகழை மேவுகின்ற கொற்றவன்றாள் போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்

| மலர் | சர்வதாரி ஆண்டு பங்குனித் திங்கள் | இதழ் |
| --- | --- | --- |
| 13 | மார்ச்சு 1949 | 12 |


## திருப்புகழ்

### திருச்செந்தூர்

*நாலு மைந்து வாசல் கீறு நாறு டம்பு கால்கை யாகி*
*நாரி யென்பி லாது மாசு மதனூடே-*

*நாத மொன்று ஆதி வாயில் நாட கங்க ளான ஆடி*
*நாட றிந்தி டாம லேக வளராமுன்;*

*நூல நந்த கோடி தேடி மால்மி குந்து பாரு ளோரை*
*நூறு செஞ்சொல் கூறி மாறி விளைதீமை-*

*நோய்க லந்த வாழ்வு றாமல் நீக லந்து ளாகு ஞான*
*நூல டங்க வோத வாழ்வு தருவாயே;*

*காலன் வந்து பால ஆவி காய வென்று பாசம் வீசு*
*காலம் வந்து வோல மோல மெனுமாதி-*

*காமனைந்து பாணமோடு வேம்பினென்று காணுமோனர்*
*காள கண்ட ரோடு வேத மொழிவோனே:*

*ஆல மொன்று வேலை யாகி யானை யஞ்சல் தீரு மூல*
*ஆழி யங்கை ஆயன் மாயன் மருகோனே-*

*ஆர ணங்கள் தாளை நாட வார ணங்கை மேவு மாதி*
*யான செந்தில் வாழ்வ தான பெருமாளே.*

*XIII 45*

## பதவுரை

—:—

காலன் வந்து - இயமன் வந்து, பாலன் ஆவி காய என்று - இளைஞராகிய மார்க்கண்டேயருடைய உயிரை வருத்தவேண்டும் என்று, பாசம் வீசு காலம் வந்து - பாசக் கயிற்றை வீசிய சமயத்தில் வெளிப்பட்டு, ஓலம் ஓலம் எனும் ஆதி - "அஞ்சேல் அஞ்சேல்" என்ற ஆதிமுதல்வரும், காமன் - மன்மதன், ஐந்து பாணமோடு வேமின் என்று - ஐந்து கணைகளுடன் வெந்தழிக என்று, காணும் மோனர் - நெற்றிக் கண்ணால் பார்த்த மௌனமூர்த்தியும், கானகண்டரோடு - திருநீலகண்டரும் ஆகிய சிவபெருமானுடன், வேதம் மொழிவோனே - வேதமுதலாகிய பிரணவத்தின் உட்பொருளைக் கூறியவரே! ஆலம் ஒன்று வேலை ஆகி - ஆலகாலம் தோன்றிய கடலில்பள்ளிகொண்டு, ஆனை அஞ்சல் தீரும் மூல - கஜேந்திரனுடைய அச்சத்தைத் தீர்த்த ஆதிமூலப் பொருளும், ஆழி அங்கை - சக்ராயுதத்தைத் தாங்கிய அழகிய கரமுடையவரும், ஆயன் - ஆயர்குலத்தில் அவதரித்தவரும், மாயன் - மாயையில் வல்லவருமாகிய திருமாலின், மருகோனே - திருமருகரே! ஆரணங்கள் தாளை நாட - வேதங்கள் திருவடியைத் துதிக்க, வாரணம் கை மேவும் - சேவற்கொடியைத் திருக்கரத்தில் ஏந்தும், ஆதியான - ஆதிபரம்பொருளாகியும், செந்தில் வாழ்வு அது ஆன - திருச்செந்தூரில் வாழ்கின்றவரும் ஆகிய, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! நாலும் ஐந்து வாசல் கீறு - ஒன்பது வாயில்களைப் பிளந்து வைத்த, நாறு உடம்பு - அவநாறுக்குஇடமான இவ்வுடம்பு, கால் கையாகி - கால்களும் கரங்களுங்கொண்டு, நாரி என்பில் ஆகும் ஆகம் - நாணி போன்ற நரம்பு எலும்பு இவைகளால் ஆகிய சரீரம்; அதனூடே - அந்த உடம்பினுள், நாதம் ஒன்ற - ஒலி (இந்திரியம்) பொருந்த, ஆதிவாயில் - தொழில்களுக்கு மூலமாகிய ஐம்பொறிகளினால், நாடகங்களான ஆடி - பலவகையான கூத்துக்களையாடி, நாடு அறிந்திடாமல் ஏக - இவ்வாறு உயிர்போயிற்று என்று உலகம் அறியாவகையில் செல்ல, வளராமுன் - இவ்வுடம்பு வளர்வதற்குமுன், நூல் அநந்த கோடி தேடி - கருவிநூல்களை பலகோடி தேடிப்படித்து, மால்மிகுந்து - மயக்கத்தையடைந்து, பாருளோரை - உலகில் உள்ள செல்வரை, நூறு செஞ்சொல் கூறி - நூற்றுக் கணக்கான செவ்வையான சொற்களால் துதித்துப்பாடி, மாறி - புத்தி தடுமாறி, வினைதீமை - அதனால் தீமை விளைந்து, நோய் கலந்த வாழ்வு உறாமல் - பலவகையான பிணிகளுடன் சேர்ந்து துன்பவாழ்வை யடையாமல், நீ கலந்து - தேவரீர் அடியேனுடைய அறிவில் கலந்து, உள் ஆகு ஞான நூல் அடங்க ஓத - உள்ளுக்குள் பொருந்தும் ஞான சாத்திரங்கள் முழுவதும் ஓதியுய்யுமாறு, வாழ்வு தருவாயே - பேரின்பவாழ்வைத் தந்து அருள்புரிவீர்.

## பொழிப்புரை

பாலராகிய மார்க்கண்டேயருடைய உயிரை வருத்த வேண்டும் என்று இயமன் வந்து பாசக்கயிற்றை வீசும் சமயம், வெளிப்பட்டு "அஞ்சேல் அஞ்சேல்" என்று அருள் புரிந்த ஆதிமுதல்வரும், மன்மதன் ஐந்து கணைகளுடன் வெந்து அழிய நெற்றிக்கண்ணைத் திறந்து பார்த்த மோன தேசிகரும், திருநீலகண்டரும் ஆகிய சிவமூர்த்தியுடன், வேதமுதலாகிய பிரணவத்தின் பொருளைப் பேசியவரே! ஆலகால விடந் தோன்றிய திருப்பாற்கடலில் பள்ளி கொண்டிருந்து, கஜேந்திரம் ஆதிமூலம் என்று அழைக்க, அதன் அச்சத்தைத் தீர்த்த சக்கிராயுதபாணியும், ஆயர்குலக் கொழுந்தும், மாயா விநோதருமாகிய நாராயணமூர்த்தியின் திருமருகரே! வேதங்கள் திருவடியைத் துதிக்க, சேவற்கொடியைத் திருக்கரத்தில் ஏந்தி, திருச்செந்தூரில் வாழுகின்ற அநாதிமூலமாகிய பெருமையின் மிக்கவரே! ஒன்பது வாசல்களைப் பிளந்து வைத்த பறிப்புக்கூடமாகிய இவ்வுடம்பு கால் கைகளைக் கொண்டு, நரம்பு எலும்புகளால் ஆகும் சரீரம். இவ்வுடம்புக்குள் நாதம் பொருந்தி, தொழில்களுக்கு மூலமாகிய மெய் வாய் கண் நாசி செவி யென்ற ஐம்பொறிகளினால் பலப்பல கூத்துக்களையாடி உலகம் இப்படி போயிற்று என்று அறியாத வகையில் உயிர் போகுமாறு இவ்வுடம்பு வீணில் வளர்ச்சியடையா முன்னும், பலகோடி நூல்களைப் படித்து மயக்கமுற்று, செல்வர்களை நூற்றுக் கணக்கான செம்மையான சொற்களைக் கொண்டு துதித்துப்பாடி, புத்தி தடுமாறி, அதனால் இளமையுற்று, நோய்களுடன் கூடிய வாழ்வை யடையா முன்னும், தேவரீர் என் உணர்வில் கலந்து, ஞானசாத்திரங்கள் யாவும் ஓதியுய்யுமாறு பேரின்பவாழ்வைத் தந்து அருள்புரிவீர்.

—:—

## விரிவுரை

**நாலுமைந்து வாசல் கீறு:—**

ஒன்பது வாசல்களோடு கூடியது இந்த உடம்பு.

"நவ தொளையுடைய குரம்பை"

என்றார் திருப்பாதிரிப்புலியூர்த் திருப்புகழில்.

**தூறுடம்பு:—**

தூறு — அவதூறு; பழி.

ஆன்றோர்கள் பழிப்பதற்கு இடமான சரீரம்.

காறுமுடலை நரிப்பொதி சோற்றினை நான் தினமும்
சோறுங் கறியும் நிரப்பிய பாண்டத்தைத் தோகையர் தம்
கூறும் மலமும் இரத்தமுஞ்சோரும் குழியில் விழா
தேறும் படி அருள்வாய் இறைவா கச்சி யேகம்பனே.

ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன் பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றில் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல் செய்தே
ஏற்றுத்திரிந்து விட்டேன் இறைவா கச்சி யேகம்பனே.

— பட்டினத்தடிகள்.

**நாரி என்பிலாகும் ஆகம்:—**

நாரி—நாண். நரம்பாலாயது. நாரி—நார் போன்ற நரம்பு.

இனி, நாரி—பெண், பெண்பாலாகிய தாயாருடைய உடம்பிலிருந்து உண்டாகிய உடம்பு எனினும் அமையும்.

இந்த உடம்பு தாய் தந்தையர்களால் உண்டாகியது.

நாடியும் நாளமும் நவில் இள எலும்பும்
வெள்ளை நீரும் வெள்ளிய பற்களும்
தலைமயிர் நகமும் தந்தையின் கூறும்.
சிறிய குடலும் சிவப்புநீரும்
மருவிய கொழுப்பும் மன்னும் ஈரலும்
நுவல் நுரை ஈரலும் நோக்கு மிதயமும்
தசையு நிணமும் தாயின் கூறும். — உடல்நூல்.

**நாதம் ஒன்ற:—**

நாதம் — ஒலி.

ஒலிக்கு வாயிலாக வாக்குகள் பொருந்த. அன்றியும் நாதம்—இந்திரியம் எனவும் பொருள்படும்.

**ஆறி வாயில்:—**

வாயில்—பொறி.

தொழில்கள் நிகழ்வதற்கு முதன்மையான ஐம்பொறிகள்; கண், காது, மூக்கு, வாக்கு, மெய்.

நாடகங்களான ஆடி:—

பலவகையான கூத்துக்களை இந்த உயிர் நடிக்கின்றது.

"கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி"

நாடறிந்திடாமலேக வளராமுன்:—

இந்த உயிர் எவ்வாறு பிரிகின்றது என்று உலகம் அறியாத வகையில் இது பிரிகின்றது. அப்படி உயிர் பிரிவதற்கு ஏதுவான இவ்வுடம்பு வறிதே வளர்ந்து என்ன பயன்?

நாலநந்த கோடிதேடி .........

பாருளோரை நாறு செஞ்சொல் கூறி:—

பலப்பல இலக்கண இலக்கியங்களைப் படித்து செல்வர்களைப் பலவாறு புகழ்ந்து பாடி அக்காலத்துப் புலவர் வீணில் கல்வியறிவைப் பாழ்படுத்தினர்.

கல்லாத வொருவனைநான் கற்ற யென்றேன்
காடெறியு மொருவனைநா டாள்வா யென்றேன்
பொல்லாத வொருவனைநான் நல்லா யென்றேன்
போர்முகத்தை யறியானைப் புலியே றென்றேன்
மல்லாரும் புயமென்றேன் சூம்பல் தோளை
வழங்காத கையனைநான் வள்ளால் என்றேன்
இல்லாது சொன்னேனுக்கு இல்லை யென்றேன்
யானுமென்றன் குற்றத்தால் ஏகின்றேன்.

— இராமச்சந்திர கவிராயர்.

கல்வியையும் அதனால் வந்த அறிவையும் இறைவனுக்கே உரியனவாக்குதல் வேண்டும்.

யாமோதிய கல்வியும் எம்மறிவும்
தாமேபெற வேலவர் தந்ததனால்
பூமேல் மயல்போயற மெய்ப்புணர்வீர்
நாமேநடவீர் நடவீர் இனியே. — அநுபூதி.

நோய் கலந்த வாழ்வு:—

இந்த உடம்புடன் கூடி வாழும் வாழ்வு பல்வேறு நோய்களுக்கிடனுயது.

சில்லாண்டும் பல்வியாதியும் உடைய இந்த உடம்புடன் கூடிவாழும்போதே இனி இந்த உடம்பு வராவகையைத் தேடிக் கொள்ளுதல் வேண்டும்.

*நீ கலந்து:—*

இறைவன் உயிரில் கலந்து இருக்கின்றான். ஆனால் பாலில் படுநெய் போல் மறைந்துளான். அப்பரம்பொருளை இடையறாத தியானத்தினால் உணர்வில் கலக்குமாறு புரிந்தவர்க்கு தயிரில் நெய்போல் விளங்கித் தோன்றுவன்.

ஞான நூலடங்க ஓத வாழ்வு தருவாயே:—

ஞானசாத்திரங்கள் எல்லாவற்றையும் ஓதுதல் வேண்டும். எதனை உணர்ந்தால் எல்லாவற்றையும் உணர்ந்ததாக ஆகுமோ அதனை உணருதல் வேண்டும்.

ஞான நூல் என்பவை அறிவு நூல் எனப்படும்; அவையாவன சிவஞானபோதம் முதலிய சாத்திரங்களாகும். சாத்திரங்கள் 14. தோத்திரங்கள் 12. இவைகளை நாடோறும் ஓதி உய்வுபெறுதல் வேண்டும்.

"கற்பவை கற்க" என்பார் திருவள்ளுவர்.

"அறிவு நூல் கலா மூடர்" என்பார் வேறு திருப்புகழில்.

காலன் வந்து பாலனாவி காய...........

ஓலம் ஓலம் எனுமாதி:—

கடகம் என்ற இடத்தில் வாழ்ந்த குச்சக முனிவருடைய புதல்வர் கௌசிகர்; அவருடைய புதல்வர் மிருகண்டேயர்; அவருடைய புதல்வர் மார்க்கண்டேயர். இவருக்கு இறைவர் தந்தது பதினாறு ஆண்டு. ஆயுள் இறுதியில் இயமன் வந்து உயிரைப் பற்றும்பொருட்டு பாசக்கயிற்றை வீச, மார்க்கண்டேயர் அபயம் அபயம் என்று இறைவரைத் தஞ்சம் புக, இறைவர் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டு, மறலியை யுதைத்து, என்றும் பதினாறாக இருக்குமாறு மார்க்கண்டேயருக்குத் திருவருள் புரிந்தனர்.

திருநீறு புனைந்து, கண்டிகை யணிந்து நாடோறும் நியமந் தவறாது உறுதியும் ஒழுக்கமும் பூண்டு சிவபெருமானை வழிபடுவோருக்குக் காலபயம் இல்லை.

மார்க்கண்டேயர் மறலிக்கு அஞ்சி, நெடுநாள் வாழ வேண்டுமென்று கருதி இறைவரை வழிபட்டாரில்லை. மிருகண்டேய முனிவரும் மருத்துவதியும் மார்க்கண்டேயருடைய

ஆயுள் இன்மையைக் குறித்து வருந்தினார்கள். தாய் தந்தையரது துன்பத்தை நீக்கி இன்பத்தைச் செய்வது மக்களது கடமை. ஆதலின் அரனாரை வழிபட்டு மார்க்கண்டேயர் மறலியை வென்றனர்.

மார்க்கண்டேயருக்கு ஆண்டு பதினாறு என்று வரந் தந்த இறைவர், ஆயுள் முடிவில் பற்றவேண்டும் என்ற இறைவர் ஆணையின் வண்ணம் பற்றவந்த இயமனை உதைத்தது நியாயமோ எனின், கூறுதும்; மார்க்கண்டேயருக்கு ஆண்டு பதினாறுதான்; அணுவளவு பாவமேனும் புரிந்தவரைத்தான் இயமன் பற்றவேண்டும். ஒரு சிறிதேனும் பாவம் புரியாத இவரை அவன் பற்றுவது முறைமையன்று. சிவமூர்த்தியை வழிபட்டு சிவமுந் தானும் ஒன்றுபட்டு சிவமயமாய் நின்ற இவரை மறலி பற்றவந்து, சிவலிங்கத்திற்கும் சேர்த்து பாசக் கயிற்றை வீசினான். அதனால் இறைவர் காலனைச் சேவடிக் கொழுந்தால் உதைத்து, என்றும் பதினாறாகப் பாலன் வாழுமாறு கருணை புரிந்தனர்.

வருங்காலன் உயிரமடியத் திருமெல் விரலால்
பெரும்பாலன் தனக்காய்ப் பிரிவித்த பெருந்தகையே
கரும்பார் வயல்சூழ் திருக்கற்குடி மன்னிநின்ற
விரும்பா எம்பெருமான் அடியேனையும் வேண்டுதியே.

— சுந்தரர்.

ஓடுகின்றனன் கதிரவன் அவன்பின்
ஓடுகின்றன ஒவ்வொரு நாளாய்
வீடுகின்றன என்செய்வோம் இனியவ்
வெய்ய கூற்றுவன் வெகுண்டிடில் என்றே
வாடுகின்றனை அஞ்சலை நெஞ்சே
மார்க்கண்டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடுகின்றவர் நாதன்றன் நாமம்
நமச்சிவாயங்காண் நாம்பெறுந் துணையே.

இயமன் தனது தூதுவரை நோக்கி, இறைவரைத் தொழுது கூறுவான்; "மாசில்லாத காளத்தீசுரருடைய திருத்தொண்டர்களைக் கண்டால் தொழுது மிகுந்த தொலையில் ஒதுங்கி விலகிப் போவீர்கள்."

தொழுது நமனுந்தன் தூதுவர்க்குச் சொல்லும்
வழுவில்சீர்க் காளத்தி மன்னன்—பழுதிலாப்
பத்தர்களைக் கண்டால் பணிந்தகலப் போமின்கள்
எத்தனையுஞ் சேய்த்தாக என்று.

—நக்கீரர்.

காலனையும் வென்றோம் கடுநரகங் கைகழன்றோம்
மேலை அருவினையின் வேரறுத்தோம்—கோல
அரணார் அவிந்தொழிய வெந்தீயம் பெய்தான்
சரணார விந்தங்கள் சார்ந்து.

— காரைக்கால் அம்மை.

காமனை நந்து பாணமோடு வேமினென்று

காணுமோனர்:—

கல்லாலின் புடையமர்ந்து, கண்ணுதற் கடவுள் சனகாதி நால்வருக்கும், எல்லாமாய் அல்லவுமாய், இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டி மோனநிலையில் அமர்ந்தனர். அதனால் உலகில் உள்ள உயிர்கள் யாவும் இணைவிழைச்சு இன்றியும் உயிர்கள் உற்பத்தி யின்றியும் வாளா கிடந்தன. அதனாலும், குமரோற்பத்தி குறித்தும், மாலயனாதி வானவர், இறைவருடைய மோன நிலையை மாற்றும் பொருட்டு மன்மதனை யேவினார்கள். நெருப்பு மலையிடம் ஒரு சிறு ஈ சென்றதுபோல் பரஞ்சுடர் முன்னே மதனன் சென்று, கரும்புவில்லை வளைத்து சுரும்பு நாண் மாட்டி மலர்க்கணைகளைப் பொழிந்தான். தென்முகப்பரமாசிரியர் சிறிதே நெற்றிக் கண்ணைத் திறந்தனர். அதினின்றுந் தோன்றிய சிறு நெருப்புப் பொறியால் மதனன் சாம்பற்குவியலாக ஆனான். மாரனை யெரித்த அக்கண்ணினின்றும் குமாரன் தோன்றினார். நிக்கிரகம் அநுக்கிரகம் இரண்டையும் அத் திருவிழியே புரிந்தது.

சிவபெருமானை வழிபடுவோருக்குக் காமபயமில்லை என்பதும் ஒருதலை.

காலன்றனை யுதைத்தான் காமன்றனை யெரித்தான்
பாலன்றனக் கிரங்கிப் பாற்கடலை—ஞாலமெச்சப்
பின்னே நடக்கவிட்டான் பேரருளை நாடாதார்க்
கென்னே நடக்கை யினி. — தாயுமானார்.

பிறவிக்குக் காரணமான அவாவை யுண்டுபண்ணுபவன் மன்மதன். இறப்பை யுண்டுபண்ணுபவன் மறலி. இந்த இருவரையும் இறைவர் உதைத்தும் எரித்துந் தண்டித்தனர். ஆதலின் இறைவழிபாடு அன்புடன் புரிபவர்க்கு இறப்பு பிறப்பு என்ற இடர் எய்தாது.

"மரணப்ரமாதம் நமக்கில்லையாம்"
"நமனையஞ்சோம்"

என்ற திருவாக்குகளை யெல்லாம் உன்னி உறுதி பெறுக.

உ

திருச்சிற்றம்பலம்

# பெரிய புராணம்

## ஆனாய நாயனர் புராணம்.

"அலைமலிந்த புனன் மங்கை ஆனாயர்க் கடியேன்"

சோழவளநாட்டின் உட்பிரிவுகளில் ஒன்று மேல்மழநாடு. அந்நாடு எந்நாட்டினுஞ் சிறந்த வளமையுடையது. மந்தியும் அறியாத கந்தமலர்ச் சோலையில் சந்திரன் தவழ்வான். நெல்லரிகள் பரப்பிய பண்ணையின் வரம்பின்மீது வண்டினம் தவழும். வைக்கோற் போர்களின்மீது மேகந்தவழும்.

உழவுதொழிலைப் புரியும் உழத்தியர் குழலில் வண்டுகள் உறங்குவன; செந்தாமரையில் கயல் மீன்கள் கண் துயில்வன; தேமாஞ்சோலையின் குளிர்ந்த நிழலில் கரிய எருமைகள் துயில் புரிகின்றன. கருப்பஞ்சாறு காய்ச்சுகின்ற இடங்களில் புகை முகிலினம்போல் எழுந்து எழில் புரிகின்றது. பெருகிய நதியின் அலைகள் உந்திய சங்கினங்கள், பெரிய இலைகளுடன் கூடிய வாழைப் புதர்களின்மீது தொடர்ந்து சென்று, அவைகளைச் சுற்றியுள்ள கொடிகளின் வழியே தவழ்ந்து, அருகிலுள்ள பாக்குமரங்களில் ஏறி முத்துக்களைச் சொரிகின்றன. அக்காட்சி மாட்சியுடைய கமுகின்பாளைகள் மலர் உதிர்ப்பதுபோல் விளங்குகின்றது.

இத்தகைய இயற்கை வளஞ்செறிந்த மருத நிலத்தின் அருகில் செழித்துள்ள முல்லை நிலத்தில் ஆன் கன்றுகளும் மான் கன்றுகளும் துள்ளித் துடித்து ஓடியாடி மகிழ்கின்றன. எல்லையில் எழிலுடையது அம் முல்லைநிலம். தமது மண்ணுட்டில் விளங்கும் மழநாட்டிற்கு எல்லா வகையாலுந் தோல்வியுற்ற விண்ணுட்டைக் கண்டு நிலமகள் புன்முறுவல் பூத்தது போல் முல்லையரும்புகள் மிக அழகாகத் திகழ்கின்றன.

---

ஆனையஞ்சல் தீரும்...... மருகோனே:—

ஆதிமூலம் என்று அழைத்த ஆனைக்கு அருள்சுரந்த அரி முகுந்தனுடைய மருகர் முருகர். அநாதிமூலம்.

### கருத்துரை

சிவகுருவே! திருமால் மருகரே! செந்திலாண்டவரே! இந்த உடம்புடன் கூடித் துன்புறுமல் ஞான வாழ்வை அருள்வீர்.

மண்ணுலகிற்கு அருங்கலமாக விளங்கும் மேல்மழநாடு. அதற்கு ஒரு மங்கலமாகப் பொலிவது திருமங்கலம் என்ற பழமையான திருத்தலம். பெருமங்கலம் நிறைந்த திருமங்கலத்தில் வீணை ஓசையும், வேத ஓசையும், வேய்ங்குழல் ஓசையும், வெண் சங்க ஓசையும் எப்போதும் இனிமையாக முழங்கும். அறம் பலபுரியும் அருங்குடிகள் நெருங்கியிருந்தன. அப்பதி செப்பரிய சீரும் சிறப்பும் பொருந்தியது. அத் திருப்பதியில் ஆயர்குலஞ் செய்த தூய பெருந்தவத்தினால் ஆனாயனார் அவதரித்தனர்.

ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யஞ்செய்தார்
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலில்
பேயுட னாடு பிரானடி யல்லது பேணாதார்.

தூய ஒளியை வீசும் வெண்ணீற்றை விரும்புந் திருத்தொண்டில் நின்ற இவர், மனத்தாலும் வாக்காலும் காயத்தாலும் பேயுடனாடும் பெருமானாகிய சிவபெருமானையன்றி வேறு ஒன்றையும் விரும்பாதவர். ஐந்தெழுத்தோதுஞ் சிந்தையுடையவர். அன்பும் அறனும் பூண்டவர்; ஈரந்தங்கிய உள்ளத்தினர்.

கன்றுகளையும், பசுக்களையும், எருதுகளையும் புறங்காட்டிற் கொண்டு சென்று, விலங்குகளால் வரும் துன்பமும் நோயும் வராவண்ணம் காப்பாற்றி, இனிய மென்புல்லை அருத்தி, தூயநீரைக் குடிப்பித்து, நிழலில் இளைப்பாறச் செய்து, ஆன் இனங்கள் அளவின்றிப் பெருகும்படிச் செய்வார். கன்றுகள், பால்கறவைமாறிய பசுக்கள், பால்கறக்கும் பசுக்கள், சினைப் பசுக்கள், இளங்கன்றுடைய புனிற்றுப் பசுக்கள், வலிய எருதுகள் ஆகிய இவைகளைத் தனித் தனியே நெருங்கி நிறைந்துள்ள தொழுவங்கள் பல அவர்பால் இருந்தன. கோவலர் என்றும் ஏவல் புரிந்திட, அந்த ஆயர்குலத் தலைவராக ஆனாயர் விளங்கினார். சிவபெருமான் திருவடியில் அன்பு பொருந்திய இசையுடனே வேய்ங்குழல் ஊதுவதை மேற்கொண்டார்.

இசைக்கலை நூலில் கூறிய முறைப்படி, வளர்ந்த மூங்கிலில் நன்கு செய்து அமைத்த குழலில் எம்பிரானுடைய பஞ்சாக்கரத்தைத் தொடுத்து, ஏழிசையின் சுருதி பெற வாசித்து, சராசரங்களெல்லாம் பொருந்துமாறு கருணையினால் இசையமுது வழங்குவார்.

எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்தைந்துந்
தொடுத்தமுறை ஏழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்களெலாம் தங்கவருந் தங்கருணை
அடுத்தஇசை யமுதளித்துச் செல்கின்றார் அங்கொருநாள்.

நறுமலர் மாலை புனைந்து, தலைமயிரைக் கோதி ஒருபுறமாக முடித்து, அதில் கண்ணிமாலையைச் சூடி, வடிந்த காதிலே காந்தள் மலரைச் சொருகி, மரவுரியும் தழையுடையும் கட்டி, நெற்றி நிறையத் திருநீறு பூசிக்கொண்டு, காலில் தோற் பாதுகை தரித்து, வெண்கோலும் வேய்ங்குழலும் எடுத்துக் கொண்டு, ஏவலரும் கோவலரும் தொழுது சூழ ஆனிரைகளும் சூழ ஒருநாள் முல்லை நிலத்திற் சென்றார். அப்பொழுது கார்காலம் ஆதலின் முல்லை மலர் பூத்து எங்கும் இயற்கை யன்னை களிநடம் புரிவாளாயினாள்.

இனிது பூத்து, தாழ்ந்த கிளைகளுடன் கூடி, வண்டுகள் தேனையுண்டு உலவுகின்ற ஒரு அழகிய கொன்றை மரத்தின் அருகில் அணைந்தார். அக்கொன்றைமரம் பூங்கொத்துகளும் கனிகளும் கூடியிருப்பது அவருக்குச் சிவபெருமானை நினைவூட்டியது; தமது திருவுள்ளத்தில் காணும் கொன்றைச் சடையான் பால் வைத்துள்ள அன்பு வெள்ளத்தின் மடையைத் திறந்தனர். அன்பு ஊறிப் பொங்கிய அமுத இசைக்குழலில் சிவபெருமானது பஞ்சாக்கரத்தை உள்ளூறையாக அமைத்து, எல்லா உயிர்களும் எலும்புங் கரையுமாறு வாசிக்கத் தொடங்கினார். இனிய குழலின் தனிவாயில் கனியமுத வாய் வைத்து ஏழிசையும் இசைநூல் இலக்கணமும் அமைய திருவைந்தெழுத்தைத் தன்னகத்தே கொண்ட குழல் இசையொலியை எங்கும் பரப்பினார். அந்த இன்னிசை கற்பகப் பூவிலிருந்துண்டாகிய தேனும் தேவாமிர்தமும் கலந்து பாய்வதுபோல் எல்லா உயிர்களுள்ளும் புகுந்து நிரம்பியது. எடுத்தல், படுத்தல், மேல், கீழ், மத்திமம், ஏற்றம், இறக்கம், முதலிய பண்களுடன் கூடிய அந்த இசை மிக மிக இனிமையாகப் பரவி, எங்கும் சிவமணம் வீசச் செய்தது.

ஆனாய நாயனாருடைய குழலின் உள்ளூறையாகிய அஞ்செழுத்தின் இனிய நாதத்தைக் கேட்ட ஆனிரைகள் அறுகருந்தி அசை போடாமல் அருகு வந்து அயர்ந்து நின்றன; தாய் மடியில் பால் குடித்துக் கொண்டிருந்த இளங்கன்றுகள் பால் குடிப்பதை விட்டு மறந்து நின்றன; எருதுகளும், மான் முதலிய விலங்குகளும் மயிர்சிலிர்த்து ... ஆடுகின்ற

மயிலினங்கள் ஆடலை விடுத்து அருகு வந்தன; பறவைகள் எல்லாம் உருகிநின்றன; ஏவல்புரிகோவலரும் தத்தம் தொழிலை மறந்து மயங்கி நின்றனர். நாகலோகத்திலிருந்த நாகர்கள் பில வழியே வந்து இன்புற்றனர்; மலைகளில் வாழும் அரமகளிர் வந்து மயங்கினர். விஞ்சையர், கின்னரர், தேவர் முதலியோர் உருகி விமானங்களின்மீது வந்து அணைந்தார்கள். கற்பகத் தருவின்கீழ் அமர்ந்து கிளிகளுக்கு அமுதூட்டிக்கொண்டிருந்த அமரமாதர்கள் அக்கிள்ளைகளுடன் கூந்தல் அலைய விமான மேறி வந்து இசையமுதைப்பருகி உருகினார்கள்; துன்புறுத்து வாரும் துன்புறுவாரும் ஒன்றுபட்டு நின்றனர். அரவங்கள் மயிலின்மீது விழுந்து புரள்கின்றன; சிங்கமும் யானையும் சார்ந்துவரும்; புல்வாய் என்னும் மான் புலியின் வாய்க்கு அரு கில் எய்தும்; காற்று வேகமாக வீசவில்லை; மரங்களின் மலர்க் கிளைகள் அசையவில்லை; மலையிலிருந்து வீழும் அருவிகளும் ஆறுகளும் ஒலித்து ஓடவில்லை; முகில் மழை பொழியாது நின் றது; ஏழுகடல்களும் அலைவீசாது அமைந்தன; இவ்வண்ணம், குழல் வண்ணத்தினால் சராசரங்கள் யாவும் விண்ணுலகும், மண்ணுலகும் இசைமயமாகி பொறிபுலன் கரணங்கள் எல் லாம் ஒன்றுபட்டன. உருகி உருகி அன்பு பெருகி நின்றன. பொய்யன்புக்கெட்டாத பொன்னம்பலத்தாடும் ஐயன் திருச் செவியில் மெய்யன்பருடைய மென்மதுர இன்னிசை சேர்ந்தது.

ஆனாயர் குழலோசை கேட்டருளி யருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராங் கண்ணுதலார் விடையுகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறுஞ் சடைதாழ.

அருட் கருணையாய திருவுள்ளமுடைய தவ வல்லியாகிய அம்பிகையுடன், கானம் முதலிய கலைகட்கெல்லாம் காரண ராகிய கண்ணுதற் கடவுள் விடையின் மீது விண்மிசை தோன்றியருளினார். எல்லாத் திசைகளிலுஞ் சிவகணங்கள் தேவர்கட்கு முன்னே நெருங்கிவரும்பொழுது வேறு ஒலிகள் ஒன்றும் எழவில்லை. குழல் ஒலியில் ஐந்தெழுத்தினால் பரவும் இசையை விரும்பிய திருக்கூத்தர் திருத்தொண்டர் முன்னே நின்று அருள்புரிந்தனர். செம்மை மனமுடைய பெரியோ ருடைய குழல் நாதத்தை எப்பொழுதும் கேட்க விரும்பிய எம் பெருமான் "இந் நின்ற நிலையே நம்பால் அணைவாய்" என்று கூறியருளினார். ஆனாயர் குழல்வாசித்த வண்ணமாகவே இறை

வர் அருகிற் சேர்ந்தனர். விண்ணவர் பூ மழை பொழிந்தனர். முனிவர்கள் வேதவொலி இசைத்தனர். நாயனார் குழல் ஒலித்துக்கொண்டு தம்முடன் வர பொன்னம்பலம் புகுந்தருளினார்.

## விளக்கம்.

திருமங்கலம்:—

இது ஆனாயநாயனார் அவதரித்த திருத்தலம். லால்குடி புகைவண்டி நிலையத்திலிருந்து பூவாளூர் வழியே, வடமேற்கில் மூன்றுகல் தொலைவில் உள்ளது. பரசுராமர் தாய்க் கொலைசெய்த பாவம் நீங்க இங்கு இறைவரை வழிபட்டு அருள் பெற்றனர். அவருக்குப் பரசு என்ற படைக்கலமும் நல்கினார்; அதனால், இறைவர் திருநாமங்கள்: பரசுராமீசுரம் உடையார்; திருமழுவுடைய நாயனார்; சாமவேதீசுரர். நல்ல நீர்வளமும், நிலவளமும் உடையது. சேக்கிழாரடிகள் ஏழு கவிகளால் இந்நாட்டு வளனை மிக இனிமையாகப் பாராட்டி யருளினார்கள்.

> ... ... ... மேன்மழ நன்னாடாம்
> அங்கது மண்ணின் அருங்கலமாக அதற்கேயோர்
> மங்கலமானது மங்கல மாகிய வாழ்மூதூர்.

என்ற அருமைத்திருவாக்கினால் இதன் பெருமை விளங்குகின்றது.

ஆனாயர்:—

இவர் ஆயர் குலத்தில் அவதரித்தவர். ஆன்களை உடைய ஆயர் ஆதலின் "ஆனாயர்" என்னுந் திருநாமம் பெற்றனர். காரணப் பெயர். இறைவனுக்குப் பஞ்சகவ்யந் தருவதும், திருநீற்றுக்குச் சாணந்தருவதும் பசுக்களேயாதலின், பசுக்களை இனிது ஓம்பும் நற்குலம் ஆயர்குலம். அக்குலம் விளங்க இவர் ஞான தீபமாகத் தோன்றினார்.

இவர் திருநீற்றினிடம் பெருவிருப்புடையவர். திருநீற்றை நிறையப் பூசிக்கொண்டும், திருநீறு பூசுந்தொண்டரைக் கண்டு அன்பு செய்தும், அவர் உள்ளம் உவக்கத் தொழும்பு செய்து மகிழ்வார்.

பசுக்களுக்கு நல்ல புல்லையருத்தி, நன்னீர் பருகுவித்து, நோயும், விலங்கினால் எய்தும் தீங்கும் வராவண்ணம் காத்து

வர்தனர். சிவமூர்த்திக்கு உபயோகமாகும், பால் முதலியன தரும் ஆவின் குலத்தைக் காப்பாற்றுதல் சிவப்பணியாகும்.

ஆனால் ஆன்குல மேய்ப்பவர் யாவரும் சிவப்பணி செய்தவ ராகார். உயிர்ப்பணி செய்தவரேயாவார். ஏன்? அரனார்க்கு என்று முறுகிவளர்ந்த சிவபத்தியுடையராய் இவர் புரிந்த னர். மற்றையோர், பால் முதலியன பெற்று வாணிபஞ் செய் யும் கருத்தினராய்ப் பேணுகின்றனர் என அறிக.

ஆனயர், பால் தயிர் நெய் முதலியன விற்று அதனால் வரும் பொருளைப் பேணவில்லையோ எனின், பேணவில்லை.

"பேயுடனாடும் பிரானடியல்லது பேணுதார்"

குழலிசை:—

இசை, எல்லோரையும் இசைவிப்பது. எல்லா உயிர் களையும் இசைவிப்பது. இனிய இசையால் கல்லும் புல்லும் உருகும். சராசரங்கள் தழைக்கும்.

இசைக்கருவிகள் ஐந்துவகைப்படும். துளைக்கருவி, நரம்புக் கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி என்பன. அதில் புல்லாங்குழல் துளைக்கருவியாகும். யாழ் நரம்புக்கருவி யாகும். வீணை வேறு, யாழ் வேறு.

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்"
—திருவெம்பாவை.

யாழைவிடக் குழல் உயர்ந்தது. யாழ் செயற்கை; குழல் இயற்கை.

"குழலினிது யாழினி தென்பர்"

என்று திருவள்ளுவர் கூறுமாறு காண்க. குழலையே முதலில் வைத்துக் கூறிய அருமையை உன்னுக.

கானகத்தில் மூங்கில்கள் வளர்ந்து ஓங்கியிருக்கும்; அதில் சில சமயம் நெருப்பு உண்டாவதால் சில மூங்கில் குழாய்களில் தொளை உண்டாகும். அப்பொழுது காற்று வீசும். அதனால் அந்தக் குழல்களில் இயற்கையாகவே இனிய நாதம் உண்டா கும்.

இந்த இனிய வேய்ங்குழலை முதன் முதலாக ஊதி உயிர்கட்கு இன்பூட்டியவர் முருகவேள்.

"குழலன் கோட்டன் குறும்பல்லியத்தன்"
—திருமுருகாற்றுப்படை.

பின்னர் இதனை வாசித்து பசுக்களுக்கு மகிழ்ச்சியை விளைவித்தவர் கண்ணபிரான்.

குழல்:—

ஒத்த நிலத்தில் காற்று மயங்காதபடி இனிது வளர்ந்த மூங்கிலை ஒரு புருடாகாரமாய் வெட்டி அதனை நிழலிலே ஓராண்டு உலருமாறு செய்யவேண்டும். நாலு பக்கங்களின் காற்று மயங்கின் நாதம் இராது. இளமையாகவும், முதுமையாகவும் இன்றி, ஒரு புருடாயு வளர்ந்த மூங்கிலாக இருக்க வேண்டும்.

ஓராண்டு நிழலில் உலர்ந்த குழல், திருகுதல், பிளத்தல் முதலியன இன்றி செவ்வையாக இருப்பதை எடுத்து, அடிப்புறத்தில் ஓரங்குலம் விடுத்து, வாயு வழங்கும் தொளையிட வேண்டும். (வாய்வைத்து ஊதுந்தொளை) நுனியில் ஓரங்குலம் விட்டு தொளையிட்டு பின்னர் விரலிடையிட்டு ஆறு தொளை போடவேண்டும். இவற்றின் விரிவை சிலப்பதிகாரம் அடியார்க்கு நல்லார் உரையில் கண்டு தெளிக.

திரு ஐந்தெழுத்து:--

பிறவிப் பெரும்பிணிக்குச் சிறந்த மருந்து திரு ஐந்தெழுத்தேயாகும். அது வேத இருதயமாக, எல்லா மந்திரங் கட்கும் மூலமாக, மகா மநுவாக விளங்கும். இத் திருமந்திரத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுதல் வேண்டும். அப்படி ஓதுவார் நோக்கும் திசைகளிற் கூடத் தீமைகள் எய்தா.

பஞ்சாக்ஷரத்தை இசையுடன் ஓதுதல் மிகவும் பயனுடையதாம். வேய்ங்குழலில் அமைத்து ஓதி, தாமும் இன்புற்று, உலகிலுள்ள சராசரங்களை யெல்லாம் இன்புறவைத்தனர் ஆனாயர்.

"எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசைவேய்ங் கருவிகளில்"

வன்மை, மென்மை, சமன் என்ற மூவகையான ஒலிகளால் அமிர்தம் ஒழுகுவதுபோல் இவர் இனிய குழலை வாசித்த போது, சரம், அசரம் இரண்டும் உருகி இசைமயமாயின.

உ

முருகா

# கற்பு

## அபிராமி

(௩௩-ம் பக்கத் தொடர்ச்சி)

புலி தன்மீது பாய்ந்து வருவதைக் கண்ட அபிராமி பொறி புலன் கலங்கி, "முருகா! முருகா!" என்று அலறி மூர்ச்சித்து வீழ்ந்தாள். முருகவேள் கருணையினால் அங்கு வேட்டையாடிக் கொண்டுவந்த பாரந்தகன் என்ற வேடன் செவியில் அபிராமியின் குரல் வீழ்ந்தது. உடனே அதிவிரைவில் வந்து, கூரிய பாணத்தை விடுத்துப் புலியைக் கொன்று வீழ்த்தினான்.

நினைவிழந்து கிடக்கும் உத்தமியைக் கண்டான். "ஆ! ஆ! இந்த அம்மாள் இந்திராணியா? லக்ஷ்மிதேவியா? ரதிதேவியா? உமையம்மையாரா? இதுபோன்ற உத்தம அழகுடைய பெண்ணை நான் இதுகாறும் கண்டதில்லை. நல்லவேளையாக நான் இன்று இந்தப்பக்கம் வேட்டையாடிக்கொண்டு வந்தேன். இவரை இன்னார் என்று அறியவேண்டும்" என்று எண்ணினான். சுனை நீரைக் கொணர்ந்து அபிராமியின் முகத்தில் தெளித்தான். எழுந்து தன்முன் நிற்கும் வில்வேடனைக் கண்டு அஞ்சினாள். புலி மாண்டு கிடப்பதையும், வேடன் தன்னையே நோக்கி நிற்பதையும், கண்டாள். வேடன் புலியைக் கொன்று தன்னைக் காப்பாற்றினான் என்று ஊகித்துக் கொண்டாள். வேடனால் தன் கற்புக்கு இடையூறு வருமோ என்று ஐயுற்றாள். மலைப்பாம்பின் வாயிலிருந்து மீட்ட வேடன் தமயந்தியை விரும்பி சாம்பராயின தன்மையை நினைந்தாள். நடுங்கிய உள்ளத்துடன் நின்றாள்.

---

அந்த இசைக்கு உள்ளுறை அஞ்செழுத்தாக விளங்கியபடியால் உலகங்களெல்லாம் அதனைக்கேட்டு உய்வு பெற்றன. மண்ணும் விண்ணும் நிறைந்த அவ்விசை பொய்யன்புக் கெட்டாத ஐயன் திருச் செவியிலும் அணுகியது.

ஆனந்தத் தாண்டவமியற்றும் ஐயரும் கேட்டு உவந்து "இந்நின்ற நிலையே நம்பால் அணைவாய்' என்று அருளிச் செய்வார் எனின் இவருடைய இசையின் பெருமையை யாரே இயம்பவல்லார்? எப்பொழுதும் செந்நின்ற மனப்பெரியார் திருக்குழல் வாசனையையுண்டாக்கி அழிவின்றி அரனார் அருகில் விளங்கும் பதம் பெற்றனர். இவருடைய இசையின் இனிமை நாரதாதியர்க்கும் அடையப் பெறாதது.

பராந்தகன் "அம்மா! தங்கள் திருவடிக்கு வணக்கம். தாங்கள் தேவமங்கையா? வனதேவதையா? அடியேனுக்கு அறிவிக்கலாம் என்றால் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

அபிராமிக்குச் சிறிது ஆறுதல் உண்டாயிற்று. அவனுடைய இனிய சொற்களால் அவன் நற்குணம் படைத்தவன் என்பதையும், அவனால் தன் கற்புக்கு இடருண்டாகாது என்பதையும் உணர்ந்தாள் "அண்ணா! நான் ஒரு அநாதை. கணவனைப் பிரிந்து தவிக்கும் துர்ப்பாக்கியவதி. எனக்கு நீங்கள் செய்த உபகாரத்திற்கு நன்றி" என்றாள். பராந்தகன், "தாயே! தாங்கள் எனக்கு நன்றி சொல்லலாமா? நான் என்ன சிறந்த வேலை ஒன்றுஞ் செய்துவிடவில்லையே? மனிதனுக்கு மனிதன் இம்மாதிரியான ஆபத்து வேளையில் உதவுவது கடமைதானே. தாங்கள் மிகவும் தளர்ந்து வாடியிருக்கின்றீர்கள். தயவுசெய்து என் குடிசைக்கு வாருங்கள். தங்கள் கணவர் இருக்குமிடத்தை அறிந்து அவர்பால் தங்களைச் சேர்க்கின்றேன்" என்றான்.

வேடனுடைய வாய்மையால் தூய்மையுடையவன் என்று அறிந்த அபிராமி அவனுடன் சென்றாள். ஒரு மலையடிவாரத்தில் இரு குன்றுகளுக்கு இடையில் ஒரு சிறு குடிசை. அக் குடிசையில் இருந்த வேடன் மனைவியாகிய பராந்தகி கணவன் ஒரு பெண்மணியுடன் வருவதைக் கண்டு எதிர்கொண்டு, கணவனையும் அபிராமியையும் தொழுதாள். பராந்தகன், "பெண்ணே! நான் வேட்டையாடப் போன காட்டில் இந்த அம்மாவைக் கொல்ல ஒரு புலி பாய்ந்தது. நான் அப்புலியைக் கொன்று, இந்த அம்மாவை மீட்டு வந்தேன். இவர்கள் கணவனைப் பிரிந்திருக்கின்றார்கள். பாவம் களைத்திருக்கின்றார்கள். இவர்களுக்கு முதலில் உணவு கொடு. மற்றதைப் பின்னர் செய்வோம்" என்றான். பராந்தகி, "அம்மா! கை கால் கழுவுங்கள். உங்களுக்கு நல்வரவு; நாங்கள் செய்த புண்ணியம் உங்களைக் காணப்பெற்றோம்" என்ற இன்னுரைகளைக் கூறி, கனி, கிழங்கு முதலிய உணவுகளைத் தந்து தேனும் தந்தாள். அன்புமயமாய அவைகளை அருந்தி அபிராமி இளைப்பாறினாள். உடன் பிறந்தவனைப் போலே வேடனும், தாய்போலே வேட்டுவன் மனைவியும் உபசரிப்பாராயினார்கள். அபிராமிக்கு மிகுந்த ஆறுதல் ஏற்பட்டது. தளர்கின்ற தனிக்கொடிக்குக் கொழுகொம்பு கிடைத்தது போலும், கடல் நடுவில் தண்ணீரில் ஆழ்ந்தவனுக்கு ஒரு தெப்பம் கிடைத்தது போலும் ஆயிற்று.

அபிராமி தனக்குள் சிந்திப்பாள்: "ஆ! ஆ! இந்த வேடனும் வேட்டுவன் மனைவியும் என்னிடத்து எவ்வளவு அன்பு செய்கின்றார்கள். இவர்கள் இருவரும் மனித உருவெடுத்த தெய்வங்கள். கல்வியறிவில்லாமலிருந்தும் அறிவின் பயனாகிய அன்பின் வழி வாழ்

களாகத் திகழ்கின்றார்கள். நான் முற்பிறப்பில் செய்த தீவினைக்கு இடையில் ஏதோ சிறிது நல்ல புண்ணியஞ் செய்தேன் போலும். அதன் பயனாக இவ்வுத்தமர்களுடைய ஆதரவு கிடைத்தது. என்னைத் தங்கைபோல் கருதி தாய அன்பு செய்து, ஆதரிக்கும் இவனும் வேடன்தான். தமயந்தியை விரும்பி இடர்செய்து எரிந்து போன அவனும் வேடன்தான். இந்த வேடனுக்குக் கல்வியறிவு ஒரு சிறிதும் இல்லை. அப்படிக்கு இருந்தும் எத்துணை நற்குணங்கள் இவன்பால் அமைந்திருக்கின்றன. சுராபுரியை யாளுகின்ற நாபாகன், அரசனாக இருந்தும், கல்வியறிவு மிகுந்திருந்தும், நற்குணம் அமையப் பெற்றானில்லை. சண்டாளன் என்னை விரும்பிப் பெண்டாள நினைந்தான். விரைவில் அவனுக்கு அழிவு வரும். சேற்றிலே செங்கழுநீர் முளைத்தது போலே வேடர்குலத்திலே இவன் பிறந்தான். கண்ணப்பரும், குகனும் வேடர் குலந்தானே? எக்குடி பிறந்தாலும், யாவரேயானாலும் நற்குணம் உடையவரே மேலானவர்'' என்று இன்னணம் எண்ணினாள். கணவனைப் பிரிந்திருக்கும் துன்பமாகிய புண்ணிற்கு அவர்களுடைய அன்பு சஞ்சீவி மருந்து போல் ஆற்றியது.

வேடன்:— அம்மா! தங்களுக்கு அடியேன் செய்யவேண்டிய பணிவிடை யாது? உத்தரவு ஆகவேண்டும்.

அபிராமி:— அண்ணா! என் மனமார்ந்த வணக்கம் தங்கட்கு உரியதாகுக. எனது ஊர் பிங்கலபுரி. மகேசமன்னனுடைய மருமகள் நான்; என்பேர் அபிராமி; மகேசமன்னருடைய மூத்த குமாரர் என் கணவர். என் சிறியமாமியின் வஞ்சனைச் செயலால் இத் துன்பத்திற்கு நான் ஆளாயினேன். தாங்கள் கருணைகூர்ந்து என் நாயகரிடம் என்னைச் சேர்த்து வைப்பீர்.

வேடன்:— தாயே! நீங்கள் வருந்த வேண்டாம். அப்படியே தங்கள் பதியின்பால் தங்களைச் சேர்த்து வைப்பேன். ஆனால், பிங்கலபுரி எந்தத் திசையில் இருக்கின்றது என்பதைக் கூட நான் அறியேன். காட்டிலேயே பிறந்து காட்டிலேயே வளர்ந்து காட்டிலேயே வாழ்கின்ற நான், நாடு நகரங்களைப்பற்றி அறிந்து கொள்ள வழியில்லையல்லவா? அம்மா! தாங்களோ மிகச் சிறந்த அரசமாதேவியாக இருக்கின்றீர். உங்களை அழைத்துக்கொண்டு அடியேன் அந்த ஊரைத் தேடிக் கண்டுபிடிப்பது கடினம். தாங்கள் என் மனைவியின் ஆதரவில் இங்ஙனமே சுகமாக இரும். அடியேன் சென்று அந்த ஊரைக் கண்டுபிடித்து, தங்கள் கணவரிடம் கூறி தேர் முதலிய வாகனங்களுடன் வருவேன். அம்மா! அது தங்கட்கு நல்ல யோசனையென்று தோன்றுமாயின் உத்தரவு செய்யுங்கள். வேறு உத்தரவு செய்தாலும் அதன்படி நடப்பேன்'' என்று கூறினான்.

அபிராமி: — அண்ணா! தாங்கள் கூறிய யோசனை நல்ல யோசனையே. அதுபடியே செய்யும். பலப்படி வழிகளில் அலக்கழிக்கப் பெற்ற எனக்கும் என் ஊர் பிங்கலபுரி எந்தத்திசை யென்பதை நிச்சயிக்க முடியவில்லை. நீர் சென்று கண்டுபிடித்து என் கணவருக்கு அறிவித்து அழைத்துவாரும். வந்தனம்.

வேடன் தன் மனைவியைப்பார்த்து, "பெண்ணே! நான் சென்று இந்த அம்மையின் ஊரை அறிந்து அவருடைய கணவரை அழைத்து வருவேன். அதுவரை இவர் உன் காவலில் இருக்க வேணும். உன் உயிரினும் உயர்வாக இவரை நீ காப்பாற்ற வேணும். இவர்களைப் பேசுந் தெய்வமாக நினை. எந்தவகையினும் இவருக்கு இடர் நேராவண்ணம் பார்த்துக்கொள். நான் வருகின்றேன்" என்று அபிராமியைப் பராந்தகியிடம் ஒப்புவித்துவிட்டு வில்லம்புடன் புறப்பட்டான்.

* * * * *

பிங்கலபுரியில் அபிராமி காணாமற்போனது பற்றிப் பெருங் குழப்பம் உண்டாயிற்று. மகேசமன்னன் மட்டற்ற கவலையுற்று காவலரையேவி எங்கெங்கும் தேடுமாறு செய்தார். ஊர் முழுவதும் பரபரப்பு உண்டாயிற்று. எங்கும் அபிராமியைப் பற்றியே பேச்சு. மகேசமன்னன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார் அபிராமியின் அரும்பெருங் குணங்களை எண்ணியெண்ணி ஏங்கினர். அத்தருணத்தில் கல்யாணி கணவனிடம் வந்து, "பிராணேசா! என் அருமை மருமகள் அபிராமி எங்கே? அந்தோ! என் நெஞ்சு பிளந்துவிடுகின்றாற்போலிருக்கின்றதே. பெறுதற்கரிய அந்தப் பெண்மாணிக்கத்தைக் காணவில்லையே. எந்தப்பாவிகளோ அவள் அணிந்திருக்கின்ற ஆபரணங்களைக் கவரும் பொருட்டு அவளைக் கொண்டுபோய்விட்டார்கள் போலும்? என் கண்மணியை மீண்டுங் காண்பேனோ?" என்று கதறினாள். மகேசன், "பெண்மணி! வருந்தாதே. நான் அதைப்பற்றித்தான் ஆலோசித்துக் கொண்டிருக்கிறேன். நீ கூறியதுபோல் யாரோ சதிசெய்து அபிராமியைக் கொலைபுரிந்திருக்க வேண்டும். நான் பகைவரையெல்லாம் வாட்டிப் பாராண்டு என்ன பயன்? என் அரண்மனையில் வந்து இந்த அடாத வேலையைப் புரிந்திருக்கின்றனர். விரைவில் இதனைக் கண்டுபிடித்து தகுந்த தண்டனை செய்வேன். உனக்கு அபிராமியினிடம் இவ்வளவு அன்பு உண்டு என்பதை நான் இன்றுதான் உணர்கிறேன்.

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் மன்ன ராயினும்
விதியினை யாவரே வெல்லு நீர்மையார்.

ஆதலினால் விதியின் வண்ணம்போல் எல்லாம் நடக்கும். அழாதே" என்று சமாதானப்படுத்தினான்.

மனைவி கருவுற்ற மகிழ்ச்சியை மாமனார் மாமியாருக்கு அறிவித்துவிட்டு, கமலன் பிங்கலபுரி வந்தான். அபிராமி மறைந்தொழிந்தாள் என்ற செய்தியைக் கேட்டு அப்படியே மூர்ச்சித்து விழுந்தான். நண்பர்கள் தேற்ற நினைவு பெற்று எழுந்தான். "அபிராமி! என் ஆருயிரே! அன்பின் வடிவே! நீ எங்கு சென்றாய்? அந்தோ! மீண்டும் உன்னைக் காண்பேனா? உன்னைப் பாவிகள் கொன்றுவிட்டார்களோ? நீ ஒருவருக்கும் ஒரு தீங்கும் செய்யவில்லையே! என் மாணிக்கமே! இனி, நான் இந்த உலகில் வாழ்ந்து என்ன பயன்? கற்பின் சிகரமாகிய உன்னையிழந்த இந்தப் பாவிக்கு இனி வாழ்வும் வேண்டுமோ? ஒரு நிமிஷங்கூட நாம் இருவரும் மனத்தாங்கல் இன்றி ஒற்றுமையாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தது தெய்வத்திற்குப் பொறுக்கவில்லையா? முருகா! குமரா! குகா! உன் திருவுளச் சம்மதமா! உன்னையே சதா துதிக்கும் என் காதற்கிளி எங்கே? உன் வேலும் மயிலும் அவளுக்குத் துணை செய்யக்கூடாதா? பன்னிரு கண்களையுடைய நீ கடைக்கண்ணாலாவது அவளைப் பார்த்து அருள்செய்யக் கூடாதா?" என்று புலம்பினான். பிதாவின் கால்மேல் வீழ்ந்து கதறினான். மகேசன் எவ்வளவு ஆறுதல் கூறியும் கமலன் ஆறாத்துயரமுற்று வருந்தினான். பித்தனைப் போலாயினான். நாலு திசைகளிலும் "என் கண்மணி எங்கே' என்று மிரண்டு மிரண்டு பார்ப்பான். "இதோ! அபிராமி! கண்ணே! வந்துவிட்டாயா? வா; வா!" என்று அலறுவான். உருவெளித் தோற்றத்தில் அபிராமியைப் பார்த்து இப்படி அலறுவான். உண்ணாமலும், உறங்காமலும், யாருடனும் உரையாடாமலும், எங்கும் உலாவாமலும், கவலைக்கடலில் மூழ்கினான்.

கல்யாணி உள்ளங் குளிர்ந்தாள். அபிராமி தொலைந்தது பற்றி ஆறுதல் அடைந்தாள். "விமலனை அடைவதற்கு என்ன வழி" என்றே சிந்திப்பாள். இரண்டு மூன்று கடிதங்கள் எழுதியும் அக் கட்டழகன் என் பால் வரவில்லையே. என்ன காரணம்? அவன் நல்ல இளைஞன் தானே. நானும் நல்ல அழகிதானே. என்னைக்கண்டால் யார்தான் மயங்கமாட்டார்கள். இந்த மகேசமன்னர் என் மையல் வலைப்பட்டு பம்பரம்போல் ஆடுகின்றாரே. அந்தக் கிழவரே அப்படி மயங்குவாராயின் இந்த இளைஞன் ஏன் மயங்கமாட்டான். எப்படியும் நான் அவனை அடைதல் வேண்டும்" என்று எண்ணினாள்.

மகேசன் வேட்டைக்குப் போயிருந்தான். மாலைநேரம். கல்யாணி தன்னை நன்கு அலங்கரித்துக்கொண்டு, கையில் பூச்செண்டு ஒன்றைத் தாங்கிக்கொண்டு விமலன் இருக்கும் மாளிகையை அடைந்தாள். விமலன் ஒரு அறையில் சிவஞான சித்தியார் என்ற அரிய நூலைப் படித்துக்கொண்டிருந்தான். அந்த அறைக்குள் கல்யாணி சென்று அவனை அடைந்துவிட்டதாகவே ஆனந்த

மூற்ருள். சிற்றன்னையைக் கண்டு விமலன் திடுக்கிட்டு எழுந்தான். கல்யாணி மலர் போன்ற அவன் கையைப்பிடித்து, "ஏன் எழுந்திருக்கின்றீர்? இரும்" என்று ஆசனத்தில் அமர்த்தினுள். அவனை குறுக்காகப் பார்த்து புன்னகை செய்தாள். "எத்தனை முறை கடிதம் எழுதியும் ஏன் உங்கள் மனம் இளகவில்லை? உங்கள் மனம் என்ன இரும்பா? கல்லா? இவ்வளவு கடின சித்தங் கூடாது. பெண்ணென்ருல் பேயும் இரங்குமே? என்மீது உங்களுக்கு இவ்வளவு வர்மமா? இது தர்மமா? என்ன மர்மமா? உங்களையே எண்ணியெண்ணி என் உள்ளம் உருகுகின்றது. அன்பு பெருகுகின்றது" என்று இப்படிப் பிதற்றி பூச்செண்டை அவன் கையில் நீட்டினுள்.

விமலனுடைய உள்ளம் நடுங்கியது. தன் உள்ளத்தில் முருகனை உறுதியாக நினைத்தான். "என் ஆண்டவனே! என் மனம் தீய வழியில் செல்லாமல் என்னைக் காத்தருள்" என்று வேண்டினுன். "அம்மா! என்ன உங்களின் உள்ளம்? வேண்டாம்; தாங்கள் எனக்குத் தாயல்லவா? நான் தங்கள் சேயல்லவா? அற்ப இன்பத்தை விரும்பி மீளா நரகிற்கு ஆளாகலாமா? எவ்வளவோ காலமாகச் செய்த புண்ணியத்தின் குவியல் அல்லவா இந்த மானுடப் பிறப்பு! அந்தோ! இப்பிறப்பில் மனதினுல் நினைப்பதற்குக்கூட முடியாத இப் பெரும்பாவத்தைச் செய்யலாமா? இந்த எண்ணத்தை விட்டு விடும். இம்மையில் பழியும், மறுமையில் பாவமும் ஏற்படும். என்ன துணிவு? சிறிதும் நாணமும் அச்சமும் இன்றி நான் இருக்குமிடம் வந்து வாய் கூசாமல் பேசுகின்றீரே? இதுவா பெண்ணியல்பு? நான் உயிருள்ள வரை இத் தீவினையைச் செய்யேன். பிறவிப்பெருங் கடலைக் கடக்கவேண்டும் என்று எண்ணி கந்தவேளை எந்தவேளையும் எண்ணித் தியானிக்கின்ற நான் இப்பாவமான படுகுழியில் விழுவேனே?

கடத்திற் குறத்திப் பிரானருளால் கலங்காத சித்தத்
திடத்தில் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்தில் கழுத்தில் பழுத்த செவ்வாயில் பணையிலுந்திச்
தடத்தில் தனத்தில் கிடக்கும் வெங்காம சமுத்திரமே.

கற்பு நெறி தவறிய சித்திராங்கியும், அகலிகையும் அடைந்த துன்பத்தைச் சிறிது எண்ணிப்பாரும். உங்கள் மனதைப் பரிசுத்தமாக் கிக் கொள்ளுங்கள்" என்ருன்.

கல்யாணி "என் கருத்தைக் கவர்ந்த காதலா! உன்னை நினைக்குந் தோறும் என் உள்ளம் வெய்யிலில் வைத்த வெண்ணெயாக உருகுகின்றது. இளங்காளையாக இருக்கின்ற நீ இப்படி வலிதில் விரும்பி வந்த கட்டழகியை அவமானப்படுத்தலாமா? பெண்கள் இரத்தினத்திற்குச் சமானம். நல்ல ரத்தினத்தை யாரும் விரும்பலாம். என் விருப்பத்தைக் கெடுக்காதே. நல்ல மணமுள்ள மலரைக் காலினுல் மிதிக்காதே. சுவையுள்ள பாலை மண்ணில் கவிழ்க்காதே.

என் உடம்பெல்லாம் காதல் தீயினால் கனல்போல் கொதிக்கின்றது. உன் அன்பு என்ற தண்ணீரால் அணைத்து என்னை ஆதரிப்பாய்; இல்லையேல் இந்தப் பெண்பாவம் விடாது. விஸ்வாமித்திரனையும் காசிபனையும் விட நீ என்ன அவ்வளவு பெரிய முனிவரனோ? அவர்களை தலை தடுமாறிவிடவில்லையா? என் அன்பா! வீண்வாதத்தை விடு. வேதாந்தம் பேசுவதற்கு இது காலம் அன்று'' என்று விமலன் அருகில் சென்றாள்.

விமலன் விலகி நின்று, ''அம்மா! இது என்ன விபரீதம்! 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற பழமொழியின் படி நின் உள்ளந் திருந்தவில்லை. தையலார் மையல்தான் நரகிற்குத் திறவுகோல். விடாய் கொண்ட ஒருவன் விடத்தைக் குடிப்பானோ? பசியால் வாடும் ஒருவன் நெருப்பை உண்பானோ? காமத்தினால் என் உயிரே பிரிந்தாலும் நெறி தவறமாட்டேன். பெண்பாலாகிய உன் வாழ்வைக் கெடுக்கக்கூடாது என்று நீ எழுதிய கடிதத்தை வெளிப்படுத்தாமல் இருந்தேன். கடைசி முறையாகக் கூறுகிறேன். இத் துற்புத்தியை விட்டுவிடு. கணவனையே கடவுளாக எண்ணி கற்பு நெறியில் நில்'' என்று கடிந்து மொழிந்தான்.

கல்யாணி: ''விமலா! என்னை நீ விரும்பாமல் வெறுப்பாயாயின் பல அல்லல்களுக்கு ஆளாவாய்''

விமலன்: ''வானம் இடிந்து தலையில் விழுந்தாலும், இமயமலை உருண்டு என்னை நசுக்கினாலும் நான் இந்தத் தீமையை மனத்தினாலுஞ் செய்யேன்''

கல்யாணி கடுங்கோபத்துடன் தன் மாளிகை சென்றாள். விமலனுடைய மனவுறுதியை எண்ணி அதிசயித்தாள். தன் முயற்சி தோல்வியுற்றதை எண்ணி வருந்தினாள். குன்று முட்டிய குருவியைப்போலானாள். அவனுக்குக் கேடு செய்யவேண்டும் என்று கருதினாள். அதற்கு ஏற்ற சூழ்ச்சியை ஆலோசித்தாள்.

ஒருநாள் மகேசமன்னன் கல்யாணியின் அந்தப்புரம் வந்தான். கல்யாணி கணவனை அன்புடன் வரவேற்று உபசரித்தாள். எப்போதுமே கணவனிடம் சிடுசிடு என்று குவிந்த முகமும் படபடத்த சொற்களும் உடைய அவள் அன்று மலர்ந்த முகமும் இனிய சொற்களும் உடையவளாய், பார்வைவலை வீசி தன் சாகசவித்தையினால் மன்னனை மயக்கினாள். வயது தளர்ந்ததேயன்றி அறிவுந் தளர்ந்து அவளுடைய மோகவலை வீழ்ந்து மூடனான மகேசன் தேன் குடித்த வண்டுபோலானான். தன்னையே மறந்து தலை தடுமாறினான். அவனது நிலையைக் கண்ட கல்யாணி தன் கருத்து நிறைவேறியதாகவே எண்ணினாள்.

மகேசன்:— மானே! உன்னை மனைவியாகப் பெற்ற என் பாக்கியமே பாக்கியம். உன்னுடைய அன்பு விலையில்லாத மாணிக்கம்.

ஆ! உன் கடைக்கண் பார்வை பதினாலு உலகங்களையும் மயக்கும். உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? விருப்பமானதைக் கேள்.

கல்யாணி:— பிராணபதி! தேவர் கோமானும் தங்களுக்கு நிகராகமாட்டான். எனக்கு என்ன குறை; ஒரு குறையுமில்லை. தங்கள் அநுக்கிரகம் இருந்தால் போதும். ஆனால் ஒரு குறையுண்டு.

மகேசன்:— என் செல்வமே! என்ன குறை? சீக்கிரம் சொல். அதைப் பூர்த்திசெய்து வைக்கிறேன்.

கல்யாணி:— என் மனத்திற்கு இசைந்த மன்னவரே! தங்களைக் கண்டு மகிழ ஆயிரங் கண்கள் இல்லையென்ற குறைதான்.

வழுக்கை மண்டையும், நரைத்த மயிரும், திரைத்த உடம்பும் உடைய அந்த அரசன் அவள் கூறியதை உண்மையென்றே எண்ணினான்.

மகேசன்:— என் ஆருயிரே! என்னிடத்தில் நீ இவ்வளவு அன்பு வைத்திருக்கின்றாய் என்பதை நான் இப்போதுதான் உணர்கிறேன். ஆ ஆ! கற்புடைய பெண்களுக்குக் கணவனிடத்தில் இப்படித்தான் அன்பிருக்கும். அருந்ததியும் உனக்கு நிகராகமாட்டாள். உன் பதிபக்தி மிக மிக உயர்ந்தது. தமயந்தியையும், சாவித்திரியையும் நான் கண்டதில்லை. ஆனால் கற்பு வடிவாகிய உன்னைக் கண்டேன். உன்னை மனைவியாகப் பெற்றேன்...... என்று அடுக்கிக் கொண்டே போனான்.

கல்யாணி தனக்குள் "இப்பேர்ப்பட்ட சாம்பிராணி கூட இருக்குமா? இதற்குத் தான் என்ன மயக்கம். தலை கிறுகிறுப்பு. அறிவற்ற அஜம். தன்னை மன்மதன் என்று எண்ணிக்கொண்டு உளறுகின்றது; நான் கூறியதை நிஜம் என்றே எண்ணி பொங்கி வழிகின்றது" என்று எண்ணினாள். அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. பக் என்று உரக்கச் சிரித்துவிட்டாள்.

மகேசன், "மாதரசே! என்ன சிரிக்கின்றாய்? திடீர் என்று என்ன இவ்வளவு பெரிய சிரிப்பு. என்னைப் பார்க்கப் பார்க்க உனக்கு ஆனந்தம் பொங்கி வருகின்றதா? பூமண்டலாதிபதியாகிய என்னைக் கணவனாகப் பெற்ற உனக்கு மகிழ்ச்சி இருக்காதா? வேறு எதையோ நினைத்து சிரித்தாப்போலிருக்கின்றதே.

கல்யாணி:— என் ஆர்வலரே! ஒன்றுமில்லை. ஒரு விஷயத்தையெண்ணினேன்; சிரிப்பு வந்துவிட்டது. கள்ளமில்லாத தங்கள் வெள்ளை உள்ளத்தை எண்ணினால் சிரிப்பும் வருகின்றது; அழுகையும் வருகின்றது.

மகேசன்:— மடமயிலே! என்ன சங்கதி?

கல்யாணி:— அதையெல்லாம் தங்களிடம் சொல்லக் கூடாது. நீங்கள் அவசரப்படுவீர்கள். ஆனால் தங்களிடம் மறைக்கவும் கூடாது.

மகேசன்:— மாணிக்கமே! என்ன விஷயம்? உன் உயிருக்கு உயிராகிய என்னிடம் சொல்வதில் என்ன பிழை?

கல்யாணி:— பிராணேசா! நமது மருமகள் கருவுற்றனள் அல்லவா?

மகேசன்:— ஆமாம், அந்த அருமை மருகியை இழந்தபின் எனக்கு மகிழ்ச்சியே இல்லை.

கல்யாணி:— அன்பே! இந்தப் பாழும் மண்ணாசை யாரைத்தான் விட்டது. காயமோ நிலையில்லாதது. நேற்றிருந்தார் இன்றில்லை. இந்த அற்ப வாழ்வுக்குத்தான் உலகம் இந்தப் பாடுபடுகின்றது. நியாயப்படி மூத்த மகனாகிய கமலனுக்கு மணிமுடி சூட்ட வேண்டுமல்லவா? எனக்கு சொல்ல நா நடுங்குகின்றது. விமலன் இந்த அரசாட்சியைப் பெறக் கருதினான். கமலனுக்குக் குழந்தையும் பிறந்து விட்டால் தனக்கு இந்த அரசாட்சி கிடைக்காது என்று எண்ணி, கருணையின்றி, தன் ஆட்கள் மூலம், பாவம் அபிராமியைக் கொன்றுவிட்டான். அது முதல் கமலன் பித்துப் பிடித்தவன்போல் இருக்கின்றான். இனி அரசாட்சி நமக்கே என்று விமலன் மனப்பால் குடிக்கின்றான்: இது பரம ரகசியம். நீங்கள் ஒன்றும் அவசரப்பட்டு திடீர் என்று ஒரு முடிவுக்கு வரவேண்டாம். நான் இப்போது சொன்ன இந்த உண்மை பின்னர் ஆதார பூர்வமாக வெளி வரும்'' என்று முத்தாய்ப்புடன் தன் வஞ்சனையை முடித்தாள்.

மகேசமன்னன் கேட்டான். திடுக்கிட்டான். கண்ணே! அந்தப் பாவிப் பிள்ளை இப்படியா செய்தான். நான் அவனுடைய வஞ்சனையை அறியாது கெட்டேனே; அவனைப் பரம சாது என்றல்லவா எண்ணினேன். நான் எண்ணிய எண்ணம் முற்றிலும் தவறாக அல்லவா இருக்கின்றது. அடே சண்டாளா! விமலா! நீ என் பிள்ளையா? தமையன் மனைவி, அதிலும் கருப்பவதி. அவளையா கொன்றாய். பாவீ! உன்னை அறிவும் நெறியும் உடைய சற்புத்திரன் என்று கருதினேனே! என் பெண்ணே! உன்னுடைய நுட்பமான அறிவுத்திறத்தினை நான் பாராட்டுகிறேன். நான் அறிவற்றவன். நீயவனை நல்லவன் என்று எண்ணினேன்.

கல்யாணி:— பிராணபதி! அப்படி ஒன்றுமில்லை. தாங்கள் வெள்ளையுள்ளம் படைத்தவர். பரம துஷ்டர்களைப் பரம சாதுவாக நினைத்திருக்கின்றீர். உங்களைப்போன்ற உத்தமர்களுக்கே அப்படித்தான் இருக்கும்.

மகேசன்:— என் முத்தே! இனி நான் தாமதியேன். இன்றிரவே அப்பாதகனைக் கானகத்திற் கொண்டுபோய்க் கை கால்களை வெட்டிவிடுமாறு செய்வேன். துஷ்டர்களுக்கு இடந்தரக் கூடாது.

கொலைஞர்களை யழைத்து, அன்றிரவு நடுயாமத்தில் விமலனைக் கட்டிலுடன் கொண்டுபோய் நடுக் காட்டில் கைகளையும் கால்களையும் வெட்டிவிடுமாறு கட்டளையிட்டான். கொலைஞர்கள் அவ்வண்ணமே ஒரு குற்றமுஞ் செய்யாத, நன்னெறியில் நின்ற, நற்குணசீலனாகிய விமலனைக் கட்டிலுடன் கானகங் கொண்டு சென்றனர்.

(தொடரும்)

---

அன்னைசொற் கொருசெவி யையர்சொற் கொருசெவி
யம்மான் றுதிக்கொருசெவி
ஆணைசொற் கொருசெவி வீரர்சொற் கொருசெவி
யயன்றுதிக் கொருசெவிவிண்ணோர்
மன்னர்சொற் கொருசெவி வள்ளிசொற் கொருசெவி
வான்வனிதை சொற்கொருசெவி
மறைத்துதிக் கொருசெவி யடியர்சொற் கொருசெவி
வல்லசுரர் சொற்கொருசெவி
பன்னிரண் டுங்கொடுத் தென்சொற்கே ளாமல்
பராமுகம தாயிருந்தாற்
பாவியேன் மெலிவுகுறை யெவர்செவியி லேற்றிப்
படுந்துயர் களைந்துகொள்வேன்
முன்னமறை நாலும்வந் துன்னுபுள் ளூரனே
முக்கட் குருக்கள்குருவே
முத்தர்குரு வேயோக சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே.

—முத்துக்குமாரசுவாமி திருவருட்பா.

# பிரார்த்தனை

கி. வா. ஜகந்நாதன்

இல்லறம், துறவறம் என்னும் இருவகை அறங்களிலும் நின்று, வழுவாது தமக்குரிய செயல்களைச் செய்வார் உலகில் அறத்தையும் அன்பையும் அருளையும் வளர்ப்பவர்கள். அறம் இல்லாவிட்டால் உலகத்தில் உயிர்கள் வாழ இயலாது. அற நெறிபற்றி வாழும் ஆருயிர்களுக்குப் பகை, சினம் முதலிய தீய இயல்புகளைப் போக்கக் காரணமாக இருப்பது அன்பு. அந்த அன்புபற்றி வாழும் மக்களுக்கு இறைவனது அருள் கிடைக்கும்.

இல்லறம், துறவறம் என்னும் அறநெறியில் நிற்பவர்கள் இறைவன் திருவருளைப் பெறுவார்கள். அல்லாதார் பெற இயலாது. அறத்தினின்றும் வழுவியவர் அன்பு செய்தும் பயன் இல்லை. முருகன் உலகில் அறநெறியை நிலைநிறுத்துவதற்குத் துணையாகிய திருவருளை உடையவன். அறத்தை அணியாகக் கொள்ளும் மக்கள் யாவரும் அவனுக்கு அடியார்களே.

அறத்தை மேற்கொண்டவர்கள் முருகனுடைய அருளை உடையவர்கள். அவன் அருளின்றி அறம் செம்மை நெறியில் நடப்பது அரிது. இல்லறம் நன்கு நடைபெற வேண்டி முருகன் மணவாளத் திருக்கோலத்தோடு காட்சி அளிக்கிறான்.

ஞானநெறிபற்றித் தவம்புரியும் பெரியோர்களும் முருக னுக்கு அடியார்களே. அந்த ஞானியரை மாதவர்களெல்லாம் வழிபடுவார்கள்.

அறச் செல்வரும் ஞானச் செல்வருமாகிய இருசாராரும் முருகனுக்குப் பிரியமானவர்கள். அல்லாதவர் அவனை அணுக முடியாது.

கடுவன் இள எயினனார் இந்தச் செய்தியைச் சொல்கிறார்.

"முருகா! உலகத்தில் அறத்தை மேற்கொண்டவர்கள் உன் குணமாகிய அருளை மேற்கொண்டவர்கள். அறம் நிரம் பிய இடத்தில் உன் அருள் தங்கும். அவர்கள் உன்னை அணு கும் தகுதி உடையவர்கள். என்றும் நிலைபெற்ற ஞானம் என்னும் இயல்புடையோர் மகா தபஸ்விகளாலும் போற்றற் குரியவர்கள். அவர்களும் உன்னைச் சேர்ந்து அருள் பெறும்

தகுதி உடையோர். அல்லாதவர்கள் உன்னை அணுகுவது இயலாத காரியம்.''

அல்லாதவர் யார்? அவர்கள் இயல்பையும் ஓரளவு சொல்கிறார் புலவர். ஆருயிர்களிடத்தில் அன்பில்லாதவர் நெஞ்சம் தீய நெஞ்சம். அந்த நெஞ்சத்தில் சினம் நிலைபெற்றிருக்கும். பிறருக்குத் துன்பத்தை உண்டாக்குவதே அத்தகைய நெஞ்சத்தை உடையவர் வேலை. அசுரஜாதியென்பது அத்தகையவர்களின் கூட்டந்தான். அன்பில்லாத மக்கள் அவர்கள்.

அல்லாதாரில் இரண்டாவது வகையினர், அறத்தைச் சேராதவர்கள். அறம் இல்லாதவர்க்குப் புகழ் இல்லை. பிற சிறப்புக்கள் இருந்தாலும் அறத்தோடு சாராதவர்க்கு அச் சிறப்புக்கள் சிறப்புக்கள் ஆகா. சிறப்பில்லாத புல்லியோர் கூட்டத்தில் சேரத்தக்கவர்கள் அவர்கள். ''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு ஆக்கம் எவனோ உயிர்க்கு'' என்பது வள்ளுவர் வாய்மொழி. அறத்தை விட்டார் சிறப்பை விட்டாரே ஆவர்.

அல்லாதாருள் மூன்றும் வகையினர் அருளை ஒழிந்தவர். ஆருயிர்களுக்குத் தீங்கு நேர்ந்தால் இரங்கும் அருளில்லாதார். தவக்கோலம் பூண்டும் விரதம் காவாமல தவறிய மக்கள். இவர்கள் முருகன் அருளைப் பெறத் தகுதியில்லாதவர்கள்.

நான்காம் வகையினர் நாஸ்திகர்; மறுபிறப்பு இல்லை என்று கூறும் பேதையர். உயிர் பலபல பிறவிகளை எடுத்து இன்ப துன்ப அநுபவங்களை அடைந்து பிறகு ஞானம் பெற்று வீடு எய்தும் என்பது நம் நாட்டு நூல்களின் துணிபு. இந்தப் பிறவியில் ஓரளவு முயன்றாலும், அந்த முயற்சியின் பயன் மறு பிறவியிலும் தொடர்ந்துவரும் என்ற நம்பிக்கையினால், மனிதன் இயன்ற அளவு நன்மை செய்ய எண்ணுகிறான். மறுபிறப்பு இல்லையென்று சொல்பவர்கள் முருகன் அருளை உணர இயலாது.

திருமுருகாற்றுப்படையில் ஓரிடத்தில் குறமகள் முருகனை வழிபடும் காட்சி வருகின்றது. அவள் விரதம் இருந்து பூசை போடுகிறாள். குறிஞ்சி நிலத்து மக்கள் யாவரும் கூடி அவள் வழிபாட்டைக் கவனித்து ஈடுபடுகிறார்கள். வாத்தியங்கள் முழங்க ஆடிப் பாடி முருகனைத் துதிக்கிறார்கள். அப்போது குறமகளுக்கு ஆவேசம் வருகிறது. எங்கும் முருகனது நினைவும் முருகனது புகழொலியும் நிரம்பியிருக்கும் அந்தச் சூழலில்

வேடிக்கை பார்க்க வந்த சிலர் இருக்கிறார்கள். வேடிக்கை பார்ப்பதோடு நில்லாமல், "எல்லாம் சுத்தப் பைத்தியக்காரத்தனம்! கடவுளாவது ஒன்றாவது!" என்று பரிகாசம் செய்யும் இயல்பை உடையவர்கள் அவர்கள்.

குறமகள் ஆடும்போது அங்கிருந்த மக்கள் அனைவரும் உலக நினைவே இன்றி ஆடுகிறார்கள். இந்தச் சூழலில் வேடிக்கை பார்க்க வந்தவர்கள்கூடத் தம்மை மறக்கின்றனர். அவர்கள் நெஞ்சு அடித்துக்கொள்கிறது. முரண்பாடான கொள்கையையுடைய அவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்கள் அஞ்சும்படியாக அந்தக் குறமகள் முருகனையே வருவித்துவிட்டாள்!

"முரணினர் உட்க, முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்"

என்று வருகிறது பாட்டு. அங்கே முரணினர் என்பதற்கு, "தெய்வம் இல்லையென்று சொல்லும் மாறுபாட்டை உடையவர்" என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுகிறார். கடவுள் இல்லை, மறுபிறப்பு இல்லை என்பவரை நாஸ்திகர் என்று சொல்வார்கள். திருமுருகாற்றுப்படையிலே வரும் நாஸ்திகரைப்போலப் பரிபாடலிலும் கடுவன் இளவெயினனார் ஒருவகை நாஸ்திகரைச் சொல்கின்றார். 'மறுபிறப்பு இல்லையென்று சொல்லும் அறிவிலிகள்' என்று குறிக்கின்றார். அவர்களும் முருகன் தாள் நிழலை அணுகும் தகுதியில்லாதவர்கள்.

இல்லற நெறிநின்று அறம் வளர்ப்போரும், துறவற நெறி நின்று ஞானம் நிரம்பியவரும் முருகன் தாள் நிழலை அடைவார்கள். தீய நெஞ்சம் படைத்த கோபிகளும், அறவுள்ளம் இல்லாதாரும், துறவுவேடம் பூண்டும் விரதத்தில் தவறியவர்களும், மறுபிறப்பு இல்லையென்போரும் அடையமாட்டார்கள்.

"நின்குணம் எதிர்கொண்டோர்
அறங்கொண்டோர் அல்லதை
மன்குணம் உடையோர்
மாதவர் வணங்கியோர், அல்லதை"

[நின் இயல்பாகிய அருளைப் பெற்றுக்கொண்டோராகிய அறநெறி மேற்கொண்டோரையன்றி, நிலைபெற்ற ஞானத்தை உடையவரும் தவமுனிவரால் வழிபடப் பெற்றோருமாகிய ஞானியரையன்றி.]

"செறுதீ நெஞ்சத்துச் சினம்கிடி னோரும்
சேரா அறத்துச் சீரி லோரும்
அழிதவப் படிவத்து அயரி யோரும்
மறுபிறப்பு இல்லெனும் மடவோரும் சேரார்
நின்நிழல்."

[உயிர்களுக்குத் தீங்கு செய்யும் தீய நெஞ்சத்தில் கோபம் தங்கியிருப்பவர்களும், தர்மத்தைச் சேராமல் சிறப்பின்றியிருப்பவர்களும், கெட்ட ஒழுக்கத்தால் அழிந்த தவமும் விரதத்தைக் கைவிட்ட தளர்ச்சியும் உடையவர்களும், மறுபிறப்பு இல்லையென்று சொல்லும் பேதையரும் நின் தாள் நிழலைச் சேரமாட்டார்கள்.

செறுதல் – தீங்கு விளைத்தல். படிவம் – விரதம். அயரியோர் - வழுவியவர்.]

"அன்னோர் அல்லது இன்னோர் சேர்வர்."

[அத்தகையவர்கள் அல்லாத இத்தகைய நற்குணம் உடையோர் நின் தாள் நிழலைச் சேர்வர்.]

நிழல் என்றது வீடுபேற்றை. என்றும் அழியாத இன்ப வீடு இறைவனது தாள். இறைவன் திருவடியே வீடாக இருப்பது. உலகியலிலும் 'நிற்க நிழல்' என்று வீட்டைக் குறிப்பதுண்டு. அழிவற்ற நிழலாக இருப்பது மோட்சமாகிய வீடு. அதுவே இறைவனது திருவடி. அந்த நிழலை அடையும் தகுதியுடையவர்களையும், தகுதி இல்லாதவர்களையும் ஒருவாறு குறித்தார் புலவர்.

பிறகு தம்முடைய விருப்பத்தைத் தெரிவித்துப் பிரார்த்தனை செய்கிறார். இறைவனிடம் நாம் எதை வேண்டுவது? வீடு வேண்டுமென்று கேட்கலாம். ஆனால் சிறந்த பக்தர்கள் அப்படிக் கேட்பதில்லை. அவன் அடியார்களுக்குத் தொண்டு செய்வதையே விரும்புவார்கள். ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்பு செய்தல் வேண்டும் என்று கேட்பார்கள்.

உலகியலில் ஈடுபட்டவர்கள் கேட்கும் பொருள்கள் எவை? அவர்களுக்கு உலகவாழ்வுதான் நிலையானது. ஆகவே பலவகைப் பொருள் வேண்டுமென்று கேட்பார்கள்; பொருள்களைக் குறைவறப் பெறுவதற்குரிய பொன் வேண்டுமென்று கேட்பார்கள். பொருளும் பொன்னும் நிரம்ப இருந்தும் அவற்றால் இன்பம் துய்க்காமல் இருப்பவர்களும் உலகில் உண்டு. அப்படியின்றிப்

பொருளும் பொன்னும் நிரம்பிய வாழ்வில் போகம் நிரம்பத் துய்க்கவேண்டும் என்று வேண்டிக்கொள்வார்கள்.

புலவர் இவற்றைக் கேட்கவில்லை. முருகனது பெருமையையும் அவன் அருளைப்பெறும் அடியவர்களது இயல்பையும் உணர்ந்தவர் ஆதலின் அவர் நிலையற்ற இவற்றை விரும்பவில்லை.

"ஆதலின் யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல"

[ஆகையால் யாம் நின்னிடம் வேண்டுமென்று கேட்பவை பொருளும் பொன்னும் இன்ப நுகர்ச்சியும் அல்ல.]

செல்வரிடம் சென்று ஒருவேளைச் சோறுபோடு என்று ஒருவன் கேட்கிறான்; மற்றொருவன் ஒரு மூட்டை நெல் வேண்டுமென்று கேட்கிறான்; வேறொருவன் ஒரு காணி நிலம் வேண்டுமென்று கேட்கிறான். இந்த மூவரிலும் நிலத்தைக் கேட்கிறவன் தான் சாமர்த்தியசாலி. எதைக் கேட்டாலும் கொடுக்கும் உள்ளவிடத்தில் போவது பெரிதல்ல; அவனிடம் எதைக் கேட்கவேண்டுமென்று ஆராய்ந்து கேட்கவேண்டும்.

புலவர் இந்தக் கலையில் வல்லவர். எப்போதும் சோறு போடும் நிலத்தை யாசிப்பவரைப்போல முருகனிடம் வேண்டிக் கொள்கிறார்.

"முருகா, உருளுகின்ற பூக்கள் கொத்துக் கொத்தாகப் பூக்கும் கடம்பமாலையை அணிந்த பெருமானே! உன் பெருமையை உணர்ந்திருக்கிறோம். புரந்தராதியர் பெற்ற பொருளும் குபேரன் பெற்ற பொன்னும் அமரர் பெற்ற போகமும் நின் அருள் பெறுவிடில் வீணாகி அழிவதை நாங்கள் உணர்வோம். உன் அருள் இல்லாத இடத்தில் அன்பு இல்லை. அன்பு இல்லாத இடத்தில் அறம் இல்லை. அறம் இல்லாவிட்டால் வாழ்வு இல்லை. ஆகவே, உன்னிடத்தில் அடியார்களாகிய நாங்கள் வேண்டும் பொருள் மூன்று. பிறர் வேண்டும் பொருள்களும் மூன்றே. பொருள், பொன், போகம் என்னும் மூன்றையும் அவர்கள் வேண்டுகிறார்கள். எங்களுக்கு அவை தாமே வரும். உன்னை அணுகி அவற்றையா வேண்டுவது? எங்களுக்கு வேண்டும் பொருள்கள் வேறு; பொருள் அல்ல; இயல்புகள். முதலில் முருகா, நின் திருவருள் வேண்டும்; அந்த அருளே புணையாகப் பற்றி ஆருயிர்களிடத்தில் மாறாமல் செய்யும் அன்பு வேண்டும்; அருளும் அன்பும் கொண்டு அறம்புரியும்

திறம் வேண்டும். அருள், அன்பு, அறம் என்ற இந்த மூன்றும் குறைவறப் பெற்றால் எங்களுக்குக் கைகூடாதது வேறொன்றும் இல்லை. உன் அருள் உயிர்களிடத்தில் அன்புசெய்யத் துணையாகும். அந்த அன்பைச் செயலிலே காட்டுவதே அறம். ஆகவே இந்த மூன்றையும் எங்களுக்கு வழங்கவேண்டும் அப்பா.''!

என்ன அழகான பிரார்த்தனை! அருளால் அன்பும் அன்பினால் அறமும் நிரம்பினால் உலகமுழுவதும் இன்ப வீடாகிவிடும். வீடு என்ற மோட்சம் இந்த உலகத்துக்கே வந்துவிடும். உலக முழுவதுமே உய்ய வேண்டும் என்ற நோக்கம் உள்ள சான்றோருக்குத்தான் இப்படிப் பிரார்த்தனை செய்துகொள்ளும் உணர்வு வரும்.

''நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருள் இணர்க் கடம்பின் ஒலிதா ரோயே!,'

[உருளுகின்ற பூங்கொத்தையுடைய தழைத்த கடம்பமாலையை அணிந்தவனே, (யாம் உன்னிடத்தில் வேண்டுமென்று இரக்கும் பொருள்கள்) நின்னிடத்தில் அமைந்துள்ள அருளும், அன்பும், அறமும் ஆகிய இம் மூன்றுமே.]

அருளென்னும் பொருளும் அன்பென்னும் பொன்னும் அறமென்னும் போகமும் வேண்டுகிறார் புலவர். இந்த மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. அருளல்லாத மருளும், அன்பல்லாத பகைமையும், அறமல்லாத மறமும் வளரும் இடம் அசுரலோகம். அருள், அன்பு, அறம்—இந்த மூன்றும் தெய்விகப்பண்பு. மனிதன் இந்த மூன்றையும் பெற்றால் தெய்வமாகி விடுகிறான். இவற்றிற்கு மறுதலையாகிற மருள், பகை, மறம் என்ற இயல்புகள் உலகில் வளர இடம் கொடுத்தல் ஆகாது. கடவுளின் பெருமையையும் ஆற்றலையும் உணராத மருளும், ஆருயிர்களிடத்தில் மனநெகிழ்ச்சி பெற்று அன்பு செய்யாத பகையும், செய்யும் செயலை நன்மை பயக்கும் வண்ணம் அறநெறி நின்று செய்யாத மறமும் உலகவாழ்வை நரகமாக்குகின்றன. உலகில் அருளும் அன்பும் அறமும் ஒருசார் இருக்கின்றன. மருளும் பகையும் மறமும் ஒருபால் தாண்டவமாடுகின்றன. மருள் முதலிய மூன்றும் தலைமைபெற்று அரசாளுவதனால் அணுக்குண்டும் அடக்குமுறையும் போர்களும் நிகழ்கின்றன. அமைதி குலைகிறது. மக்களின் உயிரும் உள்ளமும்

உடம்பும் அறிகின்றன. அருளால் உயிர் தழைக்கும்; அன்பால் உள்ளம் தழைக்கும்; அறத்தால் உடல் தழைக்கும். முருகன் இந்த மூன்றையும் உலகில் மலியும்படி செய்யும் தெய்வம். ஆகவே அப்பெருமானிடத்தில் புலவர் இந்த மூன்றையும் வேண்டுகிறார்.

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்பே இத்தகைய சிறந்த நிலையில் முருகனைத் தமிழர் வழிபட்டிருக்கிறார்கள். இந்த உலகவாழ்வைச் சுயநலத்தோடு அநுபவிக்கும் ஆசை புலவருக்கு இல்லை. உலகத்தினின்றும் நீங்கி எங்கோ உள்ள மோட்சலோகத்தில் வாழும் ஆசையும் இல்லை. இந்த லோகத்தையே இன்ப உலகமாக்க விரும்புகிறார். அருள் வித்திட்டு அன்புப் பயிர் விளைத்து அறமென்னும் போகத்தை ஆருயிரனைத்தும் நுகரும்படி செய்யவேண்டுமென்பது அவர் ஆர்வம். அவர் செய்யும் பிரார்த்தனை இந்த ஆர்வத்தை உள்ளடக்கியது. அதைக்காட்டிலும் சிறந்த வேண்டுகோளைக் காண்பது அரிது.

"யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல,
நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே!"

என்ற பிரார்த்தனையை உலக முழுவதுமே முருகனிடம் விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

இந்த அரிய கருத்துக்களையுடைய பாடல், பரிபாடலென்னும் தொகைநூலில் ஐந்தாவது செய்யுளாக விளங்குகிறது. அந்தக் காலத்தில் இந்தப் பாட்டை ராகத்தோடு பாடினார்கள். பாலைப்பண்ணில் பாடினார்களென்று தெரிகிறது. இந்த ராகத்தை அமைத்தவர் கண்ணன் நாகனார் என்ற புலவர்.

Printed & Published by M. Madhusoodana Sivam at the Thiruppugal Amirtham Press, 74 Swaminaicken Street, Chindaripeta, Madras. Editor: Sri Kirupanandavari.